www.padippakam.com



இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# தொழிலாளர் பாதை

3/-

மாதமிரு இதழ் — 427 ● 1992 டிசம்பர் 04 வெள்ளிக்கிழமை

**மார்க்சிச விரிவுரைத் தொடர்**

- மார்க்சிசத்தின் தோற்றம் — 1993 ஜனவரி 3 ஞாயிறு
- கம்யூனிஸ்ட் அறிக்கை — ஜனவரி 17 ஞாயிறு
- என்ன செய்ய வேண்டும்? — ஜனவரி 24 ஞாயிறு
- ஏகாதிபத்தியம் — முதலாளித்துவத்தின் உச்சக் கட்டம் — ஜனவரி 31 ஞாயிறு
- இடைமருவு வேலைத்திட்டம் — பெப்ரவரி 6 ஞாயிறு

**பி. ப. 2 மணி**

**அட்டன்–டிக்கோயா நகரசபை மண்டபம்**

# தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான இனவாத வேட்டையை எதிர்ப்போம்

இனவாத யுத்தத்தின் ஒரு பாகமாக யூ. என். பி, அரசாங்கம் இன்று தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக நாடு பூராவும் உக்கிரமாக்கியுள்ள அரச பயங்கரத்தினையும், தமிழ் ஒடுக்கப்படுவோர் உட்பட முழு வெகுஜனங்களையும் நசுக்கித்தள்ளும் பொருட்டு புதிதாக இயற்றப்பட்டுள்ள சர்வாதிகார அவசரகாலச் சட்டங்களையும் எதிர்த்துக் கிளம்புமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சகல தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் வேண்டுகின்றது.

''உயிர்ப் பாதுகாப்பு'' பற்றி முதலைக் கண்ணீர் வடித்து வரும் யூ. என். பி. அரசாங்கமும். முதலாளித்துவ சி,ல. சு. க, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, மக்கள் ஐக்கிய முன்னணியுடன் கைகோர்த்து சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ கட்சிகளும் சிருஷ்டித்துள்ள இனவாத ஆத்திரமூட்டல்களையிட்டு எச்சரிக்கையாக இருக்கும்படி நாம் தொழிலாள— ஒடுக்கப்படும் மக்களை வேண்டுகின்றோம்.

இந்த முதலாளிகள் 'உயிர் பாதுகாப்பு' என உண்மையில் பேசிக் கொள்வது ஏகாதிபத்தியச் சார்பு கொலைகார வர்க்க ஆட்சியின் உயிர் பாதுகாப்பையேயாகும். இவர்கள் தமிழ் ஒடுக்கப்படும் மக்களை ஒழித்துக் கட்டவும், தென் மாகாணங்களில் தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களிடையே வளர்ச்சி கண்டு வரும் எதிர்ப்பை நசுக்கவும் நாடு பூராவும் முழு அளவிலான இராணுவ பாசிச சர்வாதிகார ஆட்சியைத் திணிக்கும் தயாரிப்புக்களில் ஈடுபட்டுள்ளனர்.

கடற்படைத் தளபதி கொலையைத் தொடர்ந்து பிரேமதாச அரசாங்கம் கொழும்பு நகரம் பூராவும் இராணுவத்தையும், பொலிசையும் இறக்கியுள்ளது, ஏற்கனவே ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள், முதியோர், பெண்கள் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளதோடு நூற்றுக் கணக்கானோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர், இந்தக் கைதுகளும், விசாரணைகளும் கொழும்பு நகரில் மட்டுமன்றி நீர்கொழும்பு, வத்தளை, ஜாஎல, கண்டி, மாத்தளை, பண்டாரவளை, பதுளை போன்ற இடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. மலைநாட்டில் இந்தக் காட்டிமிராண்டி வேட்டைக்குப் பெருமளவிலான தோட்டத் தொழிலாளர்களும், இளைஞர்களும் இலக்காகி உள்ளனர்,

நவம்பர் கடைப்பகுதியில் ஜனாதிபதி பிரேமதாச வெளியிட்ட புதிய அவசரகாலச் சட்ட விதிகளின்படி தீவின் சகல குடியிருப்பாளர்களும் வீட்டில் தங்கியிருப்போர் பற்றியும், வீட்டிற்கு வந்து போவோர் பற்றியும் அருகேயுள்ள பொலிஸ் நிலையத்துக்குப் பட்டியல் சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். இதை மீறுவோர் அவசரகாலச் சட்ட விதிகளின்படி தண்டிக்கப்படுவர் எனவும் அந்த ஜனாதிபதி அறிவித்தல் குறிப்பிட்டுள்ளது. இது ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினைப் போலவே ஏனைய தொழிலாளி, ஒடுக்கப்படும் மக்களையும் நசுங்கித் தள்ளும் பொருட்டு புகுத்தப்பட்டுள்ள பொலிஸ் அரசு சட்ட விதிகள்.

இதற்கிடையே வடக்கு–கிழக்கு மாகாணங்களில் இருந்து கொழும்புக்கு வருகைதரும் மக்களுக்கு சிறப்பு அடையாள அட்டைகளை பொலிசார் விநியோகிக்க ஆயத்தமாகி வருவதாக முதலாளித்துவப் பத்திரிகைகள் குறிப்பிட்டுள்ளன, வெளி மாகாணங்களில் வதியும் தமிழ் மக்களை வீடுகளில் இருந்து துரத்தியடிக்கும் ஒரு நடவடிக்கையாக குடியிருப்பாளர்களின் விபரங்களை ஆராய்ந்து அறியாமல் அவர்களுக்கு வீடுகளை வாடகைக்கு கொடுப்பவர்களை பொலிசார் எச்சரித்துள்ளனர்.

## சி. ல. சு. க. இனவாத பிரச்சாரம்

பிரேமதாச அரசாங்கத்தை கொண்டு முடிந்தமட்டும் இனவாதப் பயங்கரங்களை உக்கிரமாக்கவும், தமிழ் மக்களுக்கு எதிரான இரத்தக் களரியைச் சிருஷ்டிக்கவும், அதன் மூலம் தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களை நசுக்கவும் முதலாளித்துவ சி. ல. சு. க. பிரச்சாரம் செய்து வருகின்றது. சி. ல. சு. க. பாராளுமன்ற உறுப்பினரான அநுருத்த ரத்வத்த, கொழும்பு நகரில் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்து புலிகள் இயக்க உறுப்பினர்களைப் பிடிப்பதற்கு இராணுவத்தினர் சமர்ப்பித்த யோசனைக்கு அரசாங்கம் இணங்காதது ஏன் என பாராளுமன்றத்தில் (23-11-92) கேள்வி எழுப்பியுள்ளார்- சர்வாதிகாரத்தின் பேரில் பலப் படுத்தப்படும் இராணுவம் அத்தகைய யோசனையை முன் வைக்கப் பெரிதும் இடம் உண்டு. அத்தகைய யோசனை இராணுவத்திடம் இருந்து வந்தாலும் சரி வராவிட்டாலும் சரி. முதலாளித்துவ சி.ல. சு. க. வட–கிழ் மாகாண தமிழ மக்களுக்கும் தென்மாகாணங்களில் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராக எத்தகைய கொடிய தாக்குதலை வேண்டி நிற்கின்றது என்பது தெளிவாகியுள்ளது.

## தேசிய ஒடுக்குமுறை

தமிழ் தேசிய இனத்தினருக்கு எதிராக இனவாதத்தைத் தூண்டுவதை தமது ஏகாதிபத்தியச் சார்பு வர்க்க ஆட்சியைப் பேணும் அரசியல் மூலோபாயமாகவே இலங்கை முதலாளி வர்க்க ஆட்சியாளர்கள் கையாண்டு வந்துள்ளனர். அதனை அவர்கள் இனவாத யுத்தமாக வளர்த்து எடுத்தனர். அதன் ஒரு பாகமாக முதலாளித்துவ தேசியவாத விடுதலைப் புலிகளுடன் நடாத்தி வரும் இராணுவ மோதுதல் அனைத்தையும் இந்த இனவாத ஆத்திர மூட்டலைக் கொழுந்து விட்டு எரியச் செய்யப் பாவித்தும் வருகின்றனர்.

1948ல் முழு இந்தியாவிலும் ஏகாதிபத்தியவாதிகள் நடைமுறைப்படுத்திய சமரசத்தின் ஒரு பாகமாகவே இலங்கையில் ஒற்றையாட்சி திணிக்கப்

(16 ம் பக்கம் பார்க்க)

# தோழர். கீர்த்தி பாலசூரிய நினைவு நீடூழி வாழ்க!

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கை கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொதுச் செயலாளராக விளங்கிய தோழர். கீர்த்தி பாலசூரிய மரணமாகி 1992 டிசம்பர் 18ம் திகதியுடன் 5ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

இரண்டு தசாப்தங்களாக தோழர். கீர்த்தி இலங்கையில் ட்ரொட்சிசத்துக்கான போராட்டத்துக்கு தலைமை தாங்கினார். நா, அ. அ. கு. தலைமையில் இருந்த பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சியின் சந்தர்ப்பவாத தலைமைக்கு எதிரான 1985-86 பிளவின் போது அனைத்துலகக் குழுவை பேணுவதில் கீர்த்தி தீர்க்கமான பாத்திரம் வகித்தார். தோழர். கீர்த்தியின் அரசியல், கோட்பாட்டு பங்களிப்புக்கள் புதிய புரட்சிகர போராளி தலைமுறைக்கு அளப்பரிய வரலாற்று படிப்பினையை வழங்குகின்றது.



தோழர். கீர்த்தி பாலசூரிய

**நினைவு தின கூட்டம்: 92 டிசம்பர் 22 – மாலை 5மணி**

**கண் காட்சி; மாலை 2 மணிக்கு**

**அரசாங்க லிகிதர் சேவை சங்க மண்டபம், கொழும்பு-2**

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் – இளம் சோசலிஸ்டுகள்**

**வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியே[illegible]**

படிப்பகம்

www.padippakam.com



### இந்திய சோசலிசத் தொழிலாளர் கழக அங்கத்தவர்

# மோசஸ் ராஜ்குமாரை நிபந்தனையின்றி மீண்டும் சேவையில் அமர்த்து!

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அரசியலுக்காக இந்தியாவினுள் போராடி வரும் ட்ரொட்ஸ்கிச இயக்கமான சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் அங்கத்தவர் தோழர். மோசஸ் ராஜ்குமாருக்கு எதிராக பங்களூரில், கர்நாடக ஆலை (B&C மில்) நிர்வாகம் ஒடுக்குமுறைத் தாக்குதலைத் தொடுத்துள்ளது.

1992 நவம்பர் 1ம் திகதியில் இருந்து தோழர். மோசஸ் ஒரு கிழமைக்கு வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். அத்தோடு அவருக்கு எதிரான குற்றச்சாட்டின் பேரில் எதுவித மான நஷ்டஈடும் இல்லாமல் வேலையில் இருந்து ஏன் நீக்கப்படக் கூடாது என்பதற்குக் காரணம் காட்டும்படியும் அவர் கோரப்பட்டுள்ளார்.

1991 நவம்பரில் பேர்லினில் கூடிய உலக தொழிலாளர் மாநாட்டினதும் சர்வதேச தொழிலாளர் பாதுகாப்பு சபையினதும் அங்கத்தவருமான



மோசஸ ராஜ்குமார்

மோசசுக்கு எதிராக நிர்வாகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய்யானவை எனவும் அவற்றை நிராகரிப்பதாகவும் மோசஸ் குறிப்பிட்டுள்ளார். ஆதலால் இக் குற்றச்சாட்டுக்களை உடன் வாபஸ் பெறும்படியும் தம்மைத் திரும்பவும் சேவையில் அமர்த்தும்படியும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மோசஸ் ராஜ்குமாரால் தாக்கப்பட்டதாக நிர்வாகம் குறிப்பிடும் வெங்கடரமணி அதிகாரி தொழிலாளர் விரோத நடவடிக்கைகளால் தொழிலாளரின் வெறுப்புக்கு ஆளானவர். இவர் இன்று பணிபுரியும் பகுதிக்கு இடமாற்றமாகி வந்ததற்குக் காரணம் முன்னைய பிரிவின் தொழிலாளர்களின் எதிர்ப்பேயாகும். இரண்டு மாதங்களுக்கு முன்னர் இந்த அதிகாரி, ஒரு தொழிலாளியையும் கமிட்டி அங்கத்தவர் ஒருவரையும் தாக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அதிகாரியின் அடாவடித்தனங்களை அம்பலப் படுத்தும் விதத்திலும், நிர்வாகத்தின் ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளை அம்பலப் படுத்தும் விதத்திலும் சோசலிசத் தொழிலாளர் கழகத்தினால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரம் கூறுவதாவது: தறியில் வேலை செய்வதற்குப் போதுமான கண்டைகளை தொழிலாளர்களுக்கு வழங்குவதில் உதாசீனப் போக்கை கடைப்பிடிக்கும் மில் நிர்வாகம், அவற்றை மேற்பார்வையிடுவதற்கு தொழிலாளர்களைவிட பன்மடங்கு சம்பளம் கொடுத்து அதிகாரிகளை நியமித்துள்ளது. அவ்வாறான அதிகாரிகளில் ஒருவரான வெங்கடரமணி கண்டைகள் இல்லாது பல தறிகள் ஆடாமல் நின்றுபோய் விட்ட நிலையிலும் கஷ்டப்பட்டு தறிகளை 8 மணிவரை ஆடவைத்த மோசஸ் ராஜ்குமாரிடம் மரியாதைக் குறைவாக பேசியது மட்டுமல்லாமல் 'பிரிப்பரேசன்' பகுதியில் போய் கண்டைகளை எடுத்து வரும்படி கூறினார்.''

B & C ஆலை ட்ரொட்ஸ்கிச தொழிலாளர் அணியின் செயலாளரான மோசஸ்ராஜ்குமாருக்கு எதிரான இச்சதியின் பின்னணியை விபரிக்கையில் சோ. தொ. க. கூறுவதாவது: ''மோசஸ் ராஜ்குமார் மீது எடுக்கப்பட்டிருக்கும் இந்தப் பழிவாங்கல் நடவடிக்கையானது தொழிலாளர்கள் மேல் வேலைப் பழுவை அதிகரிக்கச் செய்தும். புவனகிரிக்கு மில்லின் முக்கியமான பகுதியை மாற்றியும், ஆயிரக் கணக்கில் ஆட்குறைப்புச் செய்தும், போனசை 8·33 சத வீதமாக குறைத்தும், கொள்ளை இலாபம் சம்பாதிக்கும்'' திட்டமாகும். இத்திட்டத்தினை தோற்கடிக்கக் கிளர்ந்து வரும் தொழிலாளர்

(16 ம் பக்கம் பார்க்க)

### பு. க. க. அங்கத்தவர்களுக்கு எதிரான வேட்டை

# நவசமசமாஜ சங்கத் தலைவர்களைக் காக்கவே இடம்பெற்றது

### அடிப்படை மனித உரிமைகள் வழக்கு விசாரணையில் மத்திய வங்கி அதிகாரிகள்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் முன்னணி உறுப்பினர்களும், மத்திய வங்கி ஊழியர் சங்கத்தில் தலைவர், செயலாளர் பதவிகளை வகித்தவர்களுமான எம். ஜீ. கிரிபண்டா, எச். எம். பி. ஹேரத் இருவரையும் மத்திய வங்கி தலைமை அலுவலகத்தில் இருந்து தூர இடங்களுக்கு இடமாற்றி நடாத்திய வேட்டை, சங்கத்தின் இன்றைய தலைமையான நவசமசமாஜ கட்சிக் குழுவைப் பாதுகாக்கவே செய்யப்பட்டது என்பதை இலங்கை மத்திய வங்கி அதிகாரிகள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

பு. க. க. அங்கத்தினர்கள் இருவரும் தாம் அனுராதபுரம், மாத்தறை பிராந்திய அலுவலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதை எதிர்த்து உயர் நீதிமன்றதத்தில் செய்து கொண்ட அடிப்படை உரிமைகள் மீறல் தொடர்பான மனுவுக்கு மத்திய வங்கி நிர்வாகம் தாக்கல் செய்திருந்த பதிலில் இது அம்பலமாகியுள்ளது.

மத்திய வங்கி ஊழியர் சங்கத்தின் இன்றைய பொதுச் செயலாளர் சே. தோ. கருணாரத்ன, நவசமசமாஜ கட்சி மத்திய குழு உறுப்பினர். இணைச் செயலாளர்களில் ஒருவரான எம். ஜீ. நந்தசேன அக் கட்சியின் அங்கத்தவர்.



எம். ஜீ. கிரிபண்டா

சங்கத்தின் தலைவர் உட்பட இன்னும் சிலர் நவசமசமாஜ குழுவின் கையாட்கள் ஆவர், இக் குழுவின் அப்பட்டமான ஆதரவுடனேயே மத்திய வங்கி நிர்வாகம் ம. வ. ஊழியர்களின் சம்பளப் போராட்டத்தின் மத்தியில்- 1991 செப்டம்பர் 16ல் இருந்து எச்.எம். பி. ஹேரத்தை அனுராதபுரத்துக்கும் எம். ஜீ. கிரிபண்டாவை மாத்தறைக்கும் இடமாற்றம் செய்தது. இந்த வேட்டைக்கு எதிராக மத்திய வங்கியின் உள்ளேயும், வெளியேயும் தொழிலாள வர்க்கத்தின் உள்ளே நடாத்திய பிரச்சாரத்தின் ஒரு பாகமாகவே அந்த 'பெட்டிசம்' உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. ஹேரத்,



எச். எம், பி. ஹேரத்

கிரிபண்டா இருவரும் அரசியல், தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடத் தமக்குள்ள உரிமையைத் தாக்கும் விதத்தில் இடம்பெற்ற இந்த இடமாற்றம், அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகும் எனவும், அந்த இடமாற்றத்தை இரத்துச் செய்ய உத்தரவு பிறப்பிக்கும் படியும் உயர் நீதிமன்றத்திடம் முறைப்பட்டிருந்தனர்.

இந்த 'பெட்டிசத்தின்' இரண்டாம் எதிரியான அன்றைய மத்திய வங்கி அதிபர் கலாநிதி எச். என். எஸ். கருணாதிலகவும் மூன்றாம் எதிரியும் இந்த இடமாற்றத்துக்கான காரணமாக காட்டியிருந்த காரணங்களை அங்கீகரித்தனர். அவர்கள் காட்டிய காரணம் வருமாறு:

''17 (பி) ... ஆனாலும் இன்று பதவி வகிப்போர் தலைமை தாங்கும் குழுவும் விண்ணப்பதாரரும் (எம். ஜி. கிரிபண்டா) எச். எம். பி. ஹேரத்தும் தலைமை தாங்கும் குழுவும் மத்திய வங்கி ஊழியர் சங்கத்தின் இரண்டு போட்டிக் குழுக்கள் என நிர்வாகம் அறிந்திருந்தது. உத்தியோகத்தர்களை தெரிவு செய்யத் தேர்தல் நடைபெறும் காலத்தில் போட்டிக் குழுக்கள் ஆளுக்காள் எதிராக குற்றச் சாட்டுக்களை எழுப்பியதோடு அதை ஒரு பொது இலட்சணமாகக் கொள்ள முடியும். ஆனால் விண்ணப்பதாரரும் எச். எம். பி. ஹேரத்தும் தேர்தலின் பின்னரும் கூட பதவிக்கு வந்த குழுவுக்கு எதிராக தமது குற்றச்சாட்டையும் அங்கத்தவர்களைத் தூண்டுவதையும் தொடர்ந்து நடாத்தி வந்ததை நிர்வாகம் அவதானித்தது. உரிய காலத்தில் நடவடிக்கை

(16ம் பக்கம் பார்க்க)


சோசலிச புரட்சியின் உலக கட்சியைக் கட்டி எழுப்பு!

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்**

பெயர் ..............................................................

முகவரி: ............................................................

கழகத்தைப் பற்றி மேலும் விபரங்கள் பெற இந்தப் பத்திரத்தை நிரப்பி அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர்.

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்**

இல: 90, 1வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு - 10.


படிப்பகம்

www.padippakam.com



### அம்பலாங்கொட பு. க. க. உறுப்பினர்களுக்கு எதிரான

# பொலிஸ் வேட்டையை எதிர்த்து தொழிலாளி வர்க்க ஆதரவு

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அம்பலாங்கொட பிரதேச உறுப்பினர்களுக்கு எதிரான பொலிசாரினதும், யூ. என் பி. குண்டர்களதும் கூட்டுத்தாக்குதல்-ளுக்கு எதிராக பு. க. க. மேற்கொண்டுள்ள பிரச்சார இயக்கத்துக்கு தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களிடையே ஆதரவு திரண்ட வண்ணம் உள்ளது. வேலைத் தலங்கள், தொழிற் சங்கக் கிளைகளுள் போராளிகள் இப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளதோடு அதனை மேலும் முன்னெடுத்துச் செல்ல உறுதி கூறும் கடிதங்களை எமக்கு அனுப்பியுள்ளனர்.

முதலாளித்துவ அரச இயந்திரத்தின் ஒரு அங்கமான பொலிசாரின் இந்த ஆத்திரமூட்டல்கள் குறித்து சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ கட்சித் தலைவர்கள் நன்கு அறிந்திருந்த போதிலும், ஆச்சரியம் அற்ற முறையில் தொடர்ந்தும் மௌனம் சாதித்து வருகின்றனர்.

எனினும் எமது பிரச்சார இயக்கத்தினதும், தொழிலாளப் போராளிகளினதும் தாக்கம் காரணமாக கூட்டுத்தாபன, கூட்டுறவு வர்த்தக ஊழியர் சங்கம் தனது ஆட்சேபனையை பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பியுள்ளது: 'எமது சங்கத்தின் அம்பலாங்கொட பிரதேச உறுப்பினரும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அமைப்பாளருமான திரு. ரத்னசிறி மலலகமவுக்கு எதிராக 'தாக்குதல்' குற்றச் சாட்டின் பேரில் வழக்குத் தாக்கல் செய்ய அம்பலாங்கொட பொலிசார் செயற்பட்டு வருவதாக அறிகிறோம். எமக்குக் கிடைத்துள்ள தகவல்களின்படி 1991 நவம்பர் 21ம் திகதி அம்பலாங்கொட பரகஹ தோட்ட பொக்குண வீதியில் தமது அரசியல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வேளையில் ஒரு குண்டர் கோஷ்டியினால் இவர்கள் தாக்கப்பட்டுள்ளனர். அதனால் பலருக்குக் காயம் ஏற்பட்டு, ஆஸ்பத்திரியில் தங்கிச் சிகிச்சை பெற்றுள்ளனர், இத்தாக்குதல் பற்றி பொலிசாருக்கு முறைப்பாடு செய்ததோடு, கண்கண்ட சாட்சி ரத்னசிரி மலலகம இருந்தபோதிலும் காடையர்களை கைது செய்து வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்காத பொலிசார், கண்கண்ட சாட்சிக்கு எதிராகத் தாக்குதல் குற்றச்சாட்டின் பேரில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். அரசியல் காரணங்களுக்காக திரு. ரத்னசிரி மலலகமவுக்கு எதிராக பொய் குற்றச்சாட்டின் பேரில் வழக்குத் தாக்ல் செய்ய பொலிஸ் நடவடிக்கை எடுத்துள்ளதை இது தெளிவு படுத்துகின்றது. ஆதலால் அம்பலாங்கொட பிரதேச புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக உறுப்பினர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை வாபஸ் பெறும்படியும் தாக்குதல் நடாத்திய குண்டா கோஷ்டியை சட்டத்தின் பிடிக்குள் கொணர நடவடிக்கை எடுக்குமாறும் தயவாக வேண்டுகின்றோம்''.

நவசமசமாஜக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான நீல் விஜேதிலக மேற்கண்ட கடிதத்தை பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பிவைத்துள்ளார். கூ. கூ. வ. ஊ. ச. சார்பில் இக்கடிதம் அம்பலாங்கொட கிளையின் நெருக்குவாரத்தினைத் தொடர்ந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது,

பு. க. க. அங்கத்தினர்களுக்கு எதிரான அரசின் வேட்டையை கண்டனம் செய்யும் தீர்மானம் மத்திய வங்கி ஊழியர் சங்கத்தின் செயற்குழு கூட்டத்தில் பெரும்பான்மை வாக்கினால் நிறைவேறியது, பு. க. க. அங்கத்தவர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கையும், குற்றச் சாட்டையும் வாபஸ் பெறும்படியும், யூ. என். பி. குண்டர்களைத் தூண்டிவிட்டு இடம் பெறும் அரச வேட்டைகளை நிறுத்தும்படியும்] சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்புவதென செப்டம்பர் 16ல் நடைபெற்ற இக்கூட்டம் தீர்மானம் செய்தது. செயற்குழுவில் இத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது ஆதரவாக ஐந்து வாக்குகளும் எதிராக நான்கு வாக்குக்களும் கிடைத்தன. நவசமசமாஜ கட்சியின் மத்திய குழு உறுப்பினரும், மத்திய வங்கி ஊழியர் சங்க பொதுச் செயலாளருமான சே. து. கருணாரத்ன இப்பிரேரணைக்கு எதிராக வாக்களித்தார், ம. வ, ஊ, ச. செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினை தட்டிக் கழிக்க முடியாத நிலையில் பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் அனுப்ப முன்வந்த இந்த நவசமசமாஜ துரோகி, பு.க,க. தமது அங்கத்தவர்களுக்கு எதிராக பொய் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறுவதை தாம் அங்கீகரிக்கவில்லை என்ற பாணியில் கடிதம் வரைந்துள்ளார். ''மேற்சொன்ன இயக்கத்தின் கூற்று சரியானால் அம்பலாங்கொட பொலிசாரின் நடவடிக்கை தவறானது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்'' எனக் கூறும் இக் கருணாரத்ன 'இலங்கை பிரஜைகளினதும், பு. க. க. வினதும் 'ஜனநாயக உரிமையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு' பொலிஸ் மா அதிபரை வேண்டுகின்றார்!

அம்பலாங்கொட பொலிசார் பு,க. க. அங்கத்தவர்களுக்கு எதிராக பொய் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர் என்பதை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கும் சான்றுகள் இவர்களுக்கு பு. க, க,வினால் அனுப்பிவைக்கப் பட்டுள்ள கடிதத்தில் உள்ளது. அத்தோடு 'தொழிலாளர் பாதை' 'கம்கறு மாவத்த' பத்திரிகைகளில் இச்சதியை நிரூபிக்கும் பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன. குண்டர்களால் பு.க.க. உறுப்பினர்கள் தாக்கப்பட்டது தொடர்பாகச் செய்யப்பட்ட முறைப்பாட்டைப் பதிவு செய்ய அம்பலாங்கொட பொலிசார் 3 நாட்கள் மறுத்தனர், அம்முறைப்பாட்டில் பு. க. க. பொலிசார் குண்டர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காது குண்டர்களின் பொய் முறைப்பாட்டின் பேரில் பு. க. க உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளதை சுட்டிக் காட்டியது. நவசமசமாஜ தலைவர்களின் இந்த நடவடிக்கை பொலிஸ் காடைத் தனங்களுக்கு கண்ணம் தடவுவதாக உள்ளது.

பு. க, க. இத்துரோகத்தை கண்டனம் செய்வதோடு, பு, க. க. அம்பலாங்கொட அங்கத்தவர்களுக்கு எதிரான பொலிஸ், அரச வேட்டையை எதிர்த்து இடம்பெறும் பிரச்சார இயக்கத்தில் பங்குகொள்ளுமாறு தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் இயக்கங்களை வேண்டுகின்றது.

### தோட்ட தொழிற்சங்கத் தலைவர்கள்

# முதலாளிகளுடன் கூட்டுச் சேரும் உரிமை கோருகின்றார்கள்

அனைத்துலக முதலாளித்துவத்தின் மரண ஓலம் நாளுக்கு நாள் உக்கிரமாகிக் கொண்டுள்ள நிலையில் சீர்திருத்தவாத, சமூக ஜனநாயகக் கட்சிகளும், தொழிற் சங்க அதிகாரத்துவங்களும் தொழிலாளி வர்க்கத்தின் ஓர் அமைப்பு அன்றி, ஊழலும் ஒட்டுண்ணித் தனமும் நிறைந்த அதிகாரத்துவத்தின் அமைப்புக்களாக மாறியுள்ளன.

இது அமெரிக்க AFL-C.I,O தொட்டு இலங்கை இ.தொ. கா. வரை உண்மை. கடந்த 21ம் திகதி இலங்கை உயர் நீதிமன்றம் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பட்டியலில் இருந்து தொழிற்சங்க சந்தாப் பணத்தை கழிக்கும் நடவடிக்கையை தோட்ட நிர்வாகங்கள் நிறுத்திக் கொள்ள நடவடிக்கை எடுத்தது இ.தொ.கா. தலைமையின் ஆதரவுடனேயே என்பதை நிரூபித்துள்ளது. அத்தீர்ப்பு குறிப்பிட்டதாவது: ''தோட்டத்துறை தொழிற்சங்க உறுப்பினர்களின் சம்பளத்தில் இருந்து அங்கத்தவப் பணம் அறவிட வழங்கப்பட்டிருந்த சலுகையைக் கட்டுப்படுத்த நடவடிக்கைஎடுத்தது இ.தொ. கா. தலையீட்டுடனும், ஒத்துழைப்புடனும் என உயர் நீதிமன்றம் 21 திகதி தீர்ப்பளித்தது'' (திவயின—21/10/1992)

இது வெறுமனே தோட்டங்களில் உள்ள தொழிலாளர்களில் 25%க்கு குறையாதோரை பிரதிநிதித்துவம் செய்யாத தொழிற் சங்கங்களின் சந்தா கழிப்பதை நிறுத்திவிடும் பிரச்சினை மட்டுமல்ல. 25%க்கு மேற்பட்ட அங்கத்துவம் தொண்ட இ. தொ. கா. உட்பட சகல தொழிற் சங்கங்களையும் வர்க்கப் போராட்டக் களத்தில் இருந்து தள்ளி வைப்பதே இதன் நோக்கம். இந்தச் சதிகார நடவடிக்கை மூலம் இ. தொ. கா. தொண்டமான் — செல்லச்சாமி தலைமை யூ. என். பி, அரசாங்கத்தினுள் இருந்து கொண்டு எந்த வர்க்கத்துக்கு சேவைசெய்கின்றது? ஒடுக்குமுறை அரசுக்கா? அல்லது தொழிலாளி வர்க்கத்துக்கா? என்பது மீண்டும் அம்பலமாகியுள்ளது. இதனை முதலாளித்துவ அரசின் ஒரு பாகமான நீதிமன்றங்களாலும் மூடிமறைக்க முடியாது போய்விட்டது.

இத் தீர்ப்பு தமக்கு ஓர் பெரும் வெற்றி என தொழிற் சங்ககூட்டுக்கமிட்டியின் நடேசன் தலைமை கூறிக்கொண்டுள்ள போதிலும் இந்த ஆபத்துக்கு எதிரான தொழிலாளி வர்க்கத்தின் சுயாதீனமான எந்தவொரு போராட்டத்தையும் முன்னெடுக்க சமசமாஜ —கம்யூனிச — நவசமசமாஜ தலைவர்கள் கால்கட்டுப் போடுகின்றார்கள். இதனை செப்டம்பர் 28ம் திகதி அடையாள வேலை நிறுத்தத்தினை இத் தலைமை புதிய தனியார் தோட்டச் சொந்தக் காரர்களுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையே கூட்டு ஒப்பந்தை ஏற்படுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பமாக்க முயன்றதன் மூலம் காட்டிக் கொண்டது, தோட்டங்களைக் கையேற்ற தனிப்பட்ட முகாமைத்துவ கம்பனிகள் இன்னமும் தமது சங்கங்களுடன் 'புரிந்துணர்வுக்கு' வரவில்லை என இக் கூட்டுக் குழுவின் தலைவர் எஸ். நடேசன் குற்றம் சாட்டியிருந்தது இதற்கு நல்ல சான்று.

தோட்டங்களைப் பொறுப்பேற்ற தனியார் கம்பனிகளை தோட்டத் தொழிற் சங்கங்களை அங்கீகரிக்கும்படி தொழிலாளர் கோருவது ஒன்று, இத் தலைவர்களின் போராட்டம்' வேறொன்று. முன்னையது தொழிலாளர்களின் ஜனநாயக உரிமையை ஊர்ஜிதம்செய்வது' பின்னையது தனியார் மயத்தையும் தனியுடமையையும் அங்கீகரிக்கும் சந்தர்ப்பவாதம், ஆதலால் நாம் சமசமாஜக் கட்சியின் கட்டுப்பாட்டிலான லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியனின் எஸ். இராமநாதன், கம்யூனிஸ்ட் கட்சியின் ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் எஸ். நடேசன், நவசமசமாஜக் கட்சியின் லங்கா பெருந்தோட்ட ஊழியர் சங்கத்தின் விக்கிரமபாகுகருணாரத்ன தலைமைகளைக் கொண்ட தோட்டத் தொழிலாளர் கூட்டுக் குழுவின் கோரிக்கையின் பிற்போக்குத் தன்மையைப் புரிந்து கொள்ளுமாறு தொழிலாளி வர்க்கத்தை வேண்டுகின்றோம்,

இத்தலைவர்களின் 'போராட்டத்தின்' முக்கிய கோரிக்கையின் அர்த்தம் என்ன? நிர்வாகத்துடன் கூட்டுச் சேரும் உரிமையை முதலாளிகள் அங்கீகரிக்க வேண்டும். இதுவே இவர்களின் கோரிக்கை, இ. தொ. கா, யூ. என். பி, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்துடன் போன்று தோட்ட நிர்வாகிகள் தம்முடனும் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும் என்பதே இக் கூட்டுக் குழு தலைமையின் முக்கிய கோரிக்கை,

தோட்டங்கள் தனியார் கைக்குத் திரும்பவும் செல்லுவதற்கு முன்னதாக இக் கூட்டுக் குழுவின் தலைவர்கள் தோட்டங்களை அரசாங்கத்தின் நிர்வாகத்துள் வைத்திருக்கும் படியும், தொழிலாளர்களைச் சுரண்டும் கொள்கையைத் தீர்மானம் செய்கையில் தம்மையும் கலந்து கொள்ளுமாறும் கோரினர். அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் இடம்பெற்ற கோரிக்கைகள் வருமாறு:

''1. முகாமையில் சுயாதீனத்தையும், பரவலாக்கத்

(16-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான இனவாத...

13 பக்கத் தொடர்ச்சி)
பட்டது, அந்தச் சமரசமானது. இலங்கை, இந்தியா பூராவும் தொழிலாள், ஒடுக்கப்படும் மக்களை இன, மத மோதுதல்களுள் தள்ளுவதன் மூலம் ஏகாதிபத்திய சார்பு முதலாளி வர்க்க ஆட்சியை காக்கச் செய்து கொண்டதாகும். இச்சமரசமானது இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஏகாதிபத்திய வாதிகள் உலக முதலாளித்துவத்தை தமது பிடிக்குள் கொண்டிருக்கும் பொருட்டு ஸ்டாலினிஸ்டுகளின் ஆதரவுடன் செய்து கொண்ட உலக அமைப்பின் ஒரு பாகமாகும். இன, மத மோதுதல்களை தூண்டிவிடும் முறை, ஏகாதிபத்திய-முதலாளித்துவ அமைப்பினுள் வேரூன்றியுள்ள முறையைத் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்கள் புரிந்துகொள்வது அவசியம்.

பிரேமதாச அரசாங்கம் இந்த இனவாத யுத்தத்தை கடந்த மூன்று ஆண்டுகளாக காட்டுமிராண்டி மட்டத்துக்கு உயர்த்தி உள்ளது. அரச சார்பற்ற அமைப்பு ஒன்று சமீபதகில் மேற்கொண்ட ஆய்வுகளின்படி 50,000 மக்கள் கொலையுண்டும் காணாமலும் போயுள்ளனர். பரந்தளவிலான சொத்துக்களின் நாசமும் எரிபொருள், மின்சார, பொருளாதாரத் தடையும் வட-கீழ் மாகாணங்களைப் 18ம் நூற்றாண்டுக்குப் பின் தள்ளியுள்ளது. யாழ் நகர வீதிகளில் மண்ணெண்ணை 'சிமினி விளக்குகளின் தோற்றமும், மாட்டுவண்டி 'அம்புலன்ஸ்' சேவையும் இக் காட்டுமிராண்டி யுத்தத்தின் சுயகோலத்தை எடுத்துக் காட்டி உள்ளன.

கடற்படைத் தளபதியின் கொலையைத் தொடர்ந்து யாழ் மாவட்டத்தில் இடம் பெற்றுவரும் 'சுப்பர் சொனிக்' விமானத் தாக்குதல்களின் பின்னணியில் ஆளும் வர்க்கம் முகம் கொடுக்கும் ஆழமான அரசியல் - பொருளாதார நெருக்கடியின் அவஸ்தைகள் பதுங்கிக் கொண்டுள்ளன. நாளுக்கு நாள் ஆழமாகி வரும் உலகப் பொருளாதார வீழ்ச்சியின் மத்தியில் உழைப்பையும், மூலப் பொருட்களையும் கொள்ளை அடிக்கும் நிலைமைகளைச் சிருஷ்டித்து தருமாறு ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் அரைக் காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு கட்டளையிட்டுள்ளனர். இந்த வேலைத் திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதிலேயே பிரேமதாச அரசாங்கம் இலங்கையில் ஈடுபட்டுள்ளது.

இந்த ஏகாதிபத்தியப் பகற் கொள்ளைக்கு வடக்கு—கிழக்கு மாகாணங்களை விற்றுத்தள்ளும் பணி இன்னமும் பிரேமதாச அரசாங்கத்துக்கு எஞ்சியுள்ளது. அத்தோடு பிரேமதாச அரசாங்கத்தின் கொடிய தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாள ஒடுக்கப்படும் மக்களிடையே கிளர்ச்சி வளர்ச்சி பெறும் அறிகுறிகளையிட்டும் அரசு பீதியடைந்துள்ளது, பாடசாலை அபிவிருத்திச் சபைகளுக்கு எதிராக ஆசிரியர் — மாணவர் — பெற்றோர் மத்தியில் வளர்ச்சி கண்டு வரும் எதிர்ப்பு இதற்கு நல்ல எடுத்துக் காட்டு.

பிரேமதாச அரசாங்கத்தின் இந்நெருக்கடியை மேலும் மோசமாக்கும் விதத்தில் இராணுவத் துறையில் ஏற்பட்டுவரும் அபிவிருத்திகள் விளங்குகின்றன. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தாக்குதலால் இறக்கும் படையினரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதோடு யுத்தத்தின் பளுவினால் கடந்த சில மாதங்களாக சுமார் 1000 படையாட்கள் மாதாந்தம் படையை விட்டு ஓட்டமெடுத்துள்ளனர். படைக்குப் புதிதாக ஆட்களைத் திரட்ட விடுக்கப்பட்ட அழைப்புக்களுக்கு இளைஞர்களின் கவனம் திரும்பவில்லை, முதலாளித்துவ ஆட்சியை காக்கும் யுத்தத்திற்கு தம்மைப் பலியிட இளைஞர்கள் மறுத்துள்ளதை இவை காட்டுகின்றன. இந்நிலைமையில் யுத்தத்தை நடாத்துவது எப்படி? யுத்த கமிஷன்களின் முன்னுரிமைப் பங்கு யாருக்கு என்பது குறித்தும் அரசாங்கத் தலைவர்களுக்கும், இராணுவ அதிகாரிகளுக்கும் இடையே நாய்ச் சண்டை மூண்டுள்ளது.

இந்நிலையில் இலங்கைத் தொழிலாளி வர்க்கம், நாடு பூராவும் தூண்டி விடப்பட்டுள்ள் தமிழர் விரோத வேட்டையை எதிர்த்துக் கிளம்ப வேண்டும். வடக்கு—கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றவும், தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை ஊர்ஜிதம் செய்யவும் இனவாத யுத்தத்தை நிறுத்தவும் தொழிலாளி வர்க்கம் பிரச்சாரத்தில் ஈடுபட்டாக வேண்டும். இந்த யுத்தம் எமது யுத்தம் அல்ல, யுத்தத்துக்கு ஒரு ஆளும் வழங்காதே! ஒரு சதமும் கொடாதே! என்ற நிலைப்பாட்டைத் தொழிலாளி வர்க்கம் இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்க இந்திய நரசிம்மராவ் அரசாங்கம் பிரேமதாசவுக்கு கைகொடுப்பதை நிறுத்தி வைக்கும்படி இந்தியத் தொழிலாளர்களை இலங்கைத் தொழிலாள வர்க்கம் கோருவது அவசியம், ஏகாதிபத்திய வாதிகளதும், ஏகாதிபத்தியச் சார்பு எதிர்ப்புரட்சி கூட்டுகளுக்கும் எதிராக பாட்டாளிவர்க்க அனைத்துலகவாத ஐக்கியத்துக்கு அழைப்பு விடுப்பதும், அதை வென்றெடுப்பதும் மிகவும் தீர்க்கமானது.

தமிழ் தேசிய இனத்திலருக்கு எதிரான சிங்கள இனவாத பிரச்சாரத்தின் ஆயுதங்களாக 1950, 60 பதுகளில் சிங்கள சோவினிஸ்டுகள் பாவித்த 'சமஷ்டி', வடக்கு கிழக்கு' இணைப்புத் 'தீர்வுகளைப்' பழைய துருப்பிடித்த இறங்குப் பெட்டிகளில் இருந்து இழுத்தெடுக்கும் தமிழ் குட்டி முதலாளித்துவ கைக்கூலி இயக்கங்களின் முயற்சிகளை தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் அடியோடு நிராகரிக்க வேண்டும்.

யூ. என். பி. அரசாங்கத்தின் இராணுவத்துடன் மோதுதலில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிகளின் தலைமையானது இன்று ஏகாதிபத்திய வாதிகளுடனோ அல்லது ஏகாதிபத்திய சார்பு பிரேமதாச அரசாங்கத்துடனோ செய்து கொள்ளும் சமரசத்தின் மூலம் தமது முதலாளித்துவ ஆட்சியை திணிக்க சகல விதத்திலும் முயன்று வருகின்றது. இந்த முதலாளித்துவத் தலைமையின் கீழ் வடக்கு—கிழக்கு தொழிலாள ஒடுக்கப்படும் மக்களுக்கும், இளைஞர்களுக்கும் எதுவித 'விடுதலை'யும் கிடைக்கப் போவதில்லை. இம்மக்கட் பகுதியினரின் நனவான பகுதியினர் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேர்ந்து புரட்சித் தலைமையை கட்டி எழுப்ப வேண்டும். இதன் மூலமே யூ. என். பி. அரசாங்கத்தை வெளியேற்றி, இலங்கை—தமிழ் ஈழம் சோசலிசக் குடியரசை நிறுவ முடியும். தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான புரட்சிகர வேலைத்திட்டம் அதுவே.

# இந்திய சோசலிசத் தொழி..

14 ம் பக்கத் தொடர்ச்சி)
களைமிரட்டிப் பணியவைக்கும் சதியின் ஒருபாகமாகவே ட்ரொட்ஸ்கிசப்போராளிமோசஸ் ராஜ்குமாருக்கு எதிரான இந்த தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது என சோ.தொ.க. சுட்டிக்காட்டியுள்ளது.

இந்திய மத்திய பிரதேச பிகையில் தொழிற் சங்கத் தலைவர் சங்கர் குகாநியோகியின் படுகொலை, உத்தர பிரதேச டால்மியா சீமெந்து நிறுவனத்தை தனியாரிடம் ஒப்படைப்பதை எதிர்த்துப் போராடிய தொழிலாளர்களுக்கு எதிரான பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம் (17பேர் பலி) ஆகியவற்றின் ஒரு பாகமாகவே மோசசுக்கு எதிரான இவ் வேட்டை இடம்பெற்றுள்ளது.

தோழர். மோசஸ் ராஜ்குமாருக்கு எதிரான இந்த வேலைஇடைநிறுத்தத்தினை இரத்துச் செய்யும் படியும் அவரை எதுவித நிபந்தனையின்றி மீண்டும் சேவையில் அமர்த்தும் படியும் இலங்கை தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் கோர வேண்டும் எனவும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது.

# பு. க. க. அங்கத்தவர்களுக்கு எதிரான. .

14 ம் பக்கத் தொடர்ச்சி)
எடுக்காது போகின் விண்ணப்பதாரரின் குழுவின் தூண்டுதல்கள் வங்கி நடவடிக்கைக்கு இடையூறான குழப்ப நிலைமையாக உருவெடுத்திருக்கும். இது முழு வங்கித் துறையிலும் எதிர்விளைவுகளை உண்டுபண்ண இருந்ததால், அத்தகைய தூண்டுதல்களால் வங்கி நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏற்பட இடமளிக்க வங்கி நடவடிக்கைகளின் தலைமை நிறுவனமான மத்திய வங்கியால் முடியாது.

''(ஈ) இந்நிலையில் ஒரு குழுவின் செயற்பாட்டாளர்களை பிராந்திய அலுவலகங்களுக்கு இடமாற்றம் செய்வதன் மூலம் போட்டிக் குழுக்கள் இரண்டையும் பிரித்து வைக்கும்படி நிர்வாகம் நெருக்கப்பட்டது. அதன்படி அங்கத்தவர்களைத் தூண்டும் குழுவின் மிகவும் கலகக்கார அங்கத்தவர்களான விண்ணப்பதாரரும் எச்.எம்.பி. ஹேரத்தும் முறைப்படியே மத்தறை, அநுராதபுர பிராந்திய அலுவலங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

''(உ) இடமாற்றத்தின் பின்னரும் விண்ணபபதாரரும் எச். எம். பி. ஹேரத்தும் தொடர்ந்து தலைமை அலுவலகத்துக்கு வந்து தமது போட்டியாளருக்கு எதிராக அங்கத்தவர்களை தூண்டிவிடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அத்தகைய ஒரு சந்தர்ப்பம் தொடர்பாக பாதுகாப்பு நடவடிக்கை கட்டுப்பாட்டாளரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை 3R6, 3R6A எனக்குறிப்பிட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.''

பிற்போக்கு மத்திய வங்கி நிர்வாகத்தின் இத்தகைய கொடிய வேட்டைக்கு மத்தியிலும் சங்கத்தின் தலைவர்கள் அதற்கு எதிராக சின்னி விரலைத் தன்னும் உயர்த்தாதத்தோடு வேட்டைக்கும் எண்ணெய் வார்த்தனர் இந்த சந்தர்ப்பவாத பேர்வழிகளுக்கு தலைமை தாங்கும் நவசமசமாஜ மத்திய குழு உறுப்பினர் 1985 மத்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பிரச்சாரம் காரணமாக வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட வேளையில், மத்திய வங்கியின் எந்தவொரு விதியையும் மீறமாட்டேன் என உறுதி கூறி மன்னிப்புக் கோரியதன் மூலம் மீண்டும் தொழில் பெற்றுக் கொண்ட பேர்வழியாவர்.

மத்திய வங்கி நிர்வாகத்துடனான நவசமசமாஜ சந்தர்ப்பவாதிகளின் இந்த 'கோபரேட்வாத' உறவுகள் அக்கட்சியின் வலதுசாரி பாய்ச்சலை சுட்டிக் காட்டுகின்றது, அவ்வாறே மத்திய வங்கி நிர்வாகிகள், புரட்சிகர மார்க்சிஸ்டுகளிடம் இருந்து அக்கட்சியின் சந்தர்ப்பவாத தொழிற்சங்க வாதிகளை தாக்க புரட்சிகர தலைமையை நாசமாக்குவதில் ஈடுபட்டனர். தொழிலாளி, ஒடுக்கப்படும் மக்களை நசுக்கி, இராணுவ—பாசிச சர்வாதிகாரத்தை கட்டி எழுப்பும் இலக்கில் இந்த நவசமசமாஜ கட்சி தம்முடன் ஒன்றிணைந்து, செயற்படும் ஒரு ஏஜன்சியாக விளங்கும் என்பதை ஆளும் வர்க்கம் புரிந்து கொண்டிருந்ததை இந்நடவடிக்கை காட்டுகின்றது.

இந்த மனித உரிமை மீறல் பற்றிய விசாரணையில் கிரிபண்டா, ஹேரத் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கல்யானந்த திராணகம என்பவர் விண்ணப்பதாரரின் உடன்பாடு இல்லாமலேயே மத்திய வங்கியுடன் உடன்பாட்டுக்கு வந்திருந்தார். சட்டத்தரணியின் நடைமுறையை எதிர்த்து இவர்கள் உயர்நீதிமன்றத்தில் முறைப்பட்ட போதிலும் இதை விசாரணை செய்த நீதிமன்ற நீதியரசர்கள் ஒருசில நிமிடவிசாரணையுடன் இம்முறைப்பாட்டை தள்ளுபடி செய்தனர். இது முதலாளித்துவ சட்டத்தின் மூலம் தொழிலாள வர்க்க உரிமைகளை உத்தரவாதம் செய்ய முடியாது என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டு.

## தோட்ட தொழிலாளர் சங்க...

(15 ம் பக்கத் தொடர்ச்சி)
தையும் ஏற்படுத்தல். 2, கல்வி கற்றோரையும் பயிற்சி பெற்றோரையும் பயன்படுத்தி தீர்மானம் எடுத்தல். 3. தொழிற்சங்கங்களுடன் கூட்டு உடன்படிக்கையை உருவாக்குதல். 4. பொதுக்கொள்கைகளின் பேரில் அரசாங்கம், நிர்வாகம், தொழிற்சங்கங்களைக் கொண்ட ஆணைக்குழுவை நிறுவுதல்''.

தோட்டங்களை தனியார் மயமாக்க இணங்கியதன் மூலம் இ.தொ.கா. தலைமை மாபெரும் துரோகம் இழைத்துள்ளதாகக் கூறும் துண்டுப் பிரசுரமொன்றை தோ. தொ.கூ. கு. தலைவர்கள் சமீபத்தில் வெளியிட்டனர். இ. தொ. கா. தலைமை துரோகம் இழைத்தது என்பது உண்மை. ஆனால் இந்தத் தோ. தொ.கூ. கு. தலைமையின் செயற்பாடு என்ன? இ. தொ. கா. தலைமை எதுவும் செய்யாததாலும், தமது தொழிற் சங்கங்கள் சிறிதாக இருப்பதாலும் எதுவும் செய்யமுடியாது என இவர்கள் கூறினார்கள். தனியார் மயமாக்கத்துக்கு எதிராக 'நேருக்கு நேர் மோதும்' போராட்டத்தில் இறங்குமாறோ அல்லது வேலை நிறுத்தத்தில் இறங்குமாறோ இவர்கள் தொழிலாளர்களை கேட்டுக் கொண்டது கிடையாது. தனியார்மயமாக்கத்தை எதிர்த்து வேலைநிறுத்தத்தில் குதித்த தோட்டத் தொழிலாளர்களுக்கு இவர்கள் முன்வைத்த வேலைத் திட்டம் என்ன? முதலாளிகள் 'புரிந்துணர்வுடன் உடன்படிக்கை' செய்து கொள்ள வேண்டும் என்பதே.

தொழிலாளி வர்க்கத்தை அனைத்துலகவாத அடிப்படையில் ஒன்றிணைக்கவும், முதலாளி வர்க்கத்தில் இருந்து சுயாதீனமாக வர்க்கப் போராட்டப் பாதையில் அணிதிரட்டவும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே போராடுகின்றது. ஏகாதிபத்தியத்தையும், ஏகாதிபத்திய சார்பு முதலாளி வர்க்க ஆட்சியையும் தூக்கி வீசும் சோசலிசப் புரட்சியின் வேலைத்திட்டத்தினை பு.க.க. மே முன்வைக்கின்றது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தையும், பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தையும் கட்டி எழுப்புங்கள்.

கொழும்பு - 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90, வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி. 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



# ஜனாதிபதி தேர்தலில் கிளின்டனின் வெற்றி: அமெரிக்க தொழிலாளர் புதிய போருக்கு முகம் கொடுக்கின்றனர்

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜோர்ஜ்'புஷ் தோல்வியடைந்தமை கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக குடியரசுக் கட்சி ஆட்சியாளர்கள் கடைப்பிடித்த கொள்கைகள் பிரமாண்டமான முறையில் நிராகரிக்கப்பட்டுள்ளமையை காட்டுகின்றது. இவ்வாட்சிக் காலத்தில் தொழிலாளி வர்க்கத்தினதும், மத்தியதர வர்க்கத்தின் பெரும் பகுதியினரதும் வாழ்க்கை நிலைமைகள் மிலேச்சத்தனமான தாக்குதலுக்குள்ளாகின.

இலட்சோப லட்சம் தொழிலாளர்கள் பிற்போக்கு 'றீகனிச' வேலைத்திட்டத்தின் மீது கொண்ட வெறுப்பு, ஆத்திரம் காரணமாக கிளிங்டனுக்கு அல்லது பெரோட்டுக்கு வாக்களித்தனர். அத்தோடு வாஷிங்டனில் ஒரு புதிய நிர்வாகம், தொழில்களையும், முன்னேற்றமான வாழ்க்கைத் தரத்தினையும் சிருஷ்டிக்கும் எனவும் நம்பினர்.

கிளிங்டனின் 'மாற்றங்கள்' பற்றிய பேச்சுக்கள் அர்த்தமற்றவை என்பதையும் அவை தொழிலாளர்களின் நலன்களுக்கு நேர் எதிரான பொருளாதார நலன்களைக் கொண்டவை என்பதையும் அமெரிக்கத் தொழிலாளர்கள் வெகு விரைவில் அறிந்து கொள்வர்.

கிளிங்டன் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து சகல முதலாளித்துவப் பொதுஜனத் தொடர்புச் சாதனங்களும் கிளிங்டனின் வாழ்க்கை பற்றி பசுமையான தோற்றத்தை சிருஷ்டிப்பதில் ஈடுபட்டன. தோதலுக்கு முன்னர் தொலைக்காட்சி விமர்சகர்களும், பத்திரிகையாளர்களும் பில் கிளிங்டனின் பொய்கள், திரிப்புக்களை அம்பலப்படுத்துவதில் ஆளுக்காள் போட்டியிட்டு வந்தனர். வியட்னாம் யுத்த காலம் முதல் தனிப்பட்ட வாழ்க்கை வரையிலான கிளிங்டனின் அந்தஸ்துகளை இவர்கள் அம்பலப்படுத்தினர். கிளிங்டன் ஆளுனராக விளங்கிய ஆர்கன்சாஸ் மாநிலத்தில் நிலவிய வறுமை நிலை பற்றியும் கூட இவர்கள் இடைக்கிடை குறிப்பிட்டனர்.

இப்போது இந்த வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் புதிய ஜனாதிபதியை ஒரு சுயநலமற்ற மக்கள் தொண்டனாகக் காட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. இந்தத் தொடர்புச் சாதனங்களின் பணியானது அமெரிக்க முதலாளித்துவத்தின் நலன்களைப் பேணும் பணியில் ஈடுபடவுள்ள ஒரு புதிய நிர்வாகத்தின் நடவடிக்கைகளின் ஒரு பாகமாகும்.

இந்தப் பணிக்கு கிளிங்டனும், ஜனநாயகக் கட்சியும் புஷ்சுக்கும் குடியரசுக் கட்சிக்கும் எதுவிதத்திலும் குறையாத விதத்தில் தம்மை முழுமனே அர்ப்பணம்செய்து கொண்டுள்ளன. 1980 பதுகளில் இவ்விரு முதலாளித்துவக் கட்சிகளும் மிலேச்சமான வர்க்க யுத்தக் கொள்கைகளைக் கடைப்பிடித்தன. செல்வந்தர்களின் வரி வெட்டுக்களும், ஏழைகளின் சமூக உதவி திட்டங்களின் குறைப்புக்களும் காங்கிரசில் பெரும்பான்மையினராக விளங்கிய ஜனநாயகக்கட்சியினரால் ஆதரிக்கப்பட்டது. 1981ல் 'பற்கோ' விமானப் போக்குவரத்து கட்



பில் கிளின்டன்

டுப்பாட்டாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதில் இருந்து தொழிற்சங்கங்களுக்கு எதிராக இடம்பெற்ற ஒவ்வொரு தாக்குதல்களையும் ஜனநாயகக் கட்சிக்காரர்கள் ஆதரித்தனர்.

மாநிலங்கள் மட்டத்திலும், உள்ளூர் மட்டத்திலும் இவ்விரு முதலாளித்துவக் கட்சிகளின் அரசியல்வாதிகளும் தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக இடம்பெற்ற பெருமளவிலான வேலை நீக்கங்கள், தொழிற்சங்க உடைப்புக்சள், வரவு செலவுத்திட்ட வெட்டுக்கள், குடியிருப்புக்களில் இருந்து அகற்றுதல் ஆகியவற்றில் பங்குபற்றினர்.

கிளிங்டனின் ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரம் றீகனதும், புஷ்சினதும் பிற்போக்கு சமூகக் கொள்கைகளுக்கும் அடிபணிந்து போவதையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. இவை 'வரிவிதித்து செலவழி' என்ற கொள்கையைக் கண்டனம் செய்ததன் மூலமும் வறுமையையும், சமத்துவமின்மையையும் ஒழிக்கும் அரசாங்க வேலைத்திட்டங்களை கைவிட்டதன் மூலமும் அம்பலமாகின,

தேர்தலுக்கு அடுத்த நாள் ஆர்க்கன் சாஸ் லிட்டில் றொக்கில் நடாத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் கிளிங்டன் இலாப முறைக்கும், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் பொருளாதார, அரசியல் நலன்களுக்கும் தமது ஆதரவை வழங்கும் அறிக்கையொன்றை வாசித்தார்.

''அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கை நிச்சயம் தொடரும்'' என்ற உத்தரவாதத்துடன் ஆரம்பித்த கிளிங்டன், 'அமெரிக்காவின் ஆட்சி மாறினாலும் அமெரிக்காவின் அடிப்படை நலன்கள் மாறாது' என 'நண்பர்களையும், எதிரிகளையும் ஒரே மாதிரி' எச்சரித்தார்.

கடந்த 12 ஆண்டுகளாக குடியரசுக் கட்சியின் வெள்ளை மாளிகையினதும் ஜனநாயகக் கட்சியில் காங்கிரசினதும் நலன் விரும்பிகளான கோடீஸ்வரர்களுடன் நேருக்கு நேர் பேசுகையில் கிளிங்டன் கூறியதாவது- ''இன்று நான் எனது நிதி, வர்த்தகத் தலைவர்களுக்குக் கூறுவதாவது பிராந்தியத்தில் மாற்றம் ஏற்பட்ட போதிலும் நாம் புதிய வளர்ச்சியை கொண்ட ஸ்திரப்பாட்டை கடைப்பிடிக்கவேண்டியதன் அவசியத்தைப் புரிந்து கொண்டுள்ளோம்... நான் கொணர முயலும் மாற்றங்கள் அமெரிக்காவின் சந்தை முறைகளைப் பலப்படுத்துமேயன்றி, அவற்றைப் பலவீனப்படுத்தாது''.

ஆர்கான்சாஸ் ஆளுனர் கிளிங்டனை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யும் பொருட்டு கையாண்ட வாக்குறுதிகள், பொய்களையெல்லாம் தாண்டிக் கிளிங்டனின் பெரும் வர்த்தக கம்பனி ஆதரவுப் பண்பு தலைநீட்டியுள்ளது.

கிளின்டனின் கொள்கைகள் நிர்ணயம் செய்யப்படப்போவது அவரின் மோசடி தேர்தல் பிரச்சாரத்தின் மூலமோ அல்லது அதில் நம்பிக்கை வைத்து வாக்களித்தவர்களின் எதிர்பார்ப்புக்களின் மூலமோ அன்று. புதிய ஆட்சியை உருவகப் படுத்தப் போவது அமெரிக்காவினதும், உலக முதலாளித்துவத்தினதும் அடிப்படையானதும் ஒழுங்கு முறையானதுமான நெருக்கடியே.

புஷ்சின் தேர்தல் படுதோல்வி ஜனாதிபதி ஹேர்பட் ஹூபர் தோல்வியின் பின்னர் ஏற்பட்ட படுமோசமான தேர்தல் தோல்வியாகும். ஈராக்குக்கு எதிரான 'பாலைவன சூறாவளியின்' கதாநாயகனான புஷ், ஒரு புதிய உலக ஒழுங்குமுறையை நிர்மாணிப்பது பற்றியும் ஒரு பிரகடனம் வெளியிட்டவர். அக்கட்டத்தில் 'வேர்க்கஸ்லீக்' வளைகுடா யுத்தம், அமெரிக்க முதலாளித்துவத்தின் ஆழமான பொருளாதார, சமூக நெருக்கடியில் இருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்புவதற்கான ஒரு கையாலாகாத்தனமான முயற்சி எனக் குறிப்பிட்டது.

கிளிங்டனின் வருகை எந்த விதத்திலும் அமெரிக்க முதலாளித்துவத்தின் நெருக்கடியைத் தீர்க்கப்போவதில்லை. மாறாக 1992 தேர்தல் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக அமெரிக்க முதலாளி வர்க்கம் கையாண்டு வந்த இரு கட்சி அரசியல் முறையில் ஏற்பட்ட வெடிப்பை அம்பலப்படுத்தி உள்ளது. இலட்சக்கணக்கான வர்த்தகர்கள் இரண்டு முதலாளித்துவக் கட்சிகளிலும் நம்பிக்கை இழந்தமை, கோடீஸ்வர 'சுயேட்சை' வேட்பாளர் பெருமளவு வாக்குகளைப் பெறச் செய்தது.

ஆட்சிக்குள் நுழைந்து கொள்ளப் போகும் கிளிங்டனில் இருந்தும் மற்றும் முதலாளித்துவக் கும்பல்களில் இருந்தும் சுயாதீனமான முறையில் தொழிலாளி வர்க்கம் தனது சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரலை அபிவிருத்தி செய்ய வேண்டும். ஒரு சோசலிச வேலைத் திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளி வர்க்கத்தின் சுயாதீனமான அரசியல் அமைப்புக்குப் பெரும் அவசியம் ஏற்பட்டுள்ளது. தொழிலாளி வர்க்கம் இரண்டு முதலாளித்துவக் கட்சிகளுடனான தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டு, தனது சொந்த அரசியல் கருவியை—தொழிற் கட்சியை— கட்டி எழுப்ப வேண்டும். ஒரு தொழிலாளர் அரசாங்கத்தை நிறுவுவதற்கு அது அவசியம். அந்தத் தொழிற் கட்சி, அமெரிக்கத் தொழிலாளர் வர்க்கத்தின் சகல பிரிவினரையும்— வெள்ளையர் — கறுப்பர், ஹிஸ்பானியர், வெளிநாட்டவர் — ஐக்கியப் படுத்தும் அரசியல் ஆயுதமாக விளங்கவேண்டும், கனடாவிலும், மெக்சிக்கோவிலும் உலகம் பூராவும் உள்ள தமது சகோதர, சகோதரிகளுடன் அமெரிக்க தொழிலாளர்களை ஐக்கியப்படுத்துவது சோசலிசத்துக்கான போராட்டத்துக்கு அவசியம்.

வேர்க்கஸ் லீக்கின் 1992 தேர்தல் பிரச்சாரம் இந்தப் போராட்டத்தின் முக்கிய கட்டத்தினைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது. இப் பிரச்சாரம் மூன்று அடிப்படைக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது: தொழிலாளி வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியம், சோசலிச கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொழிற் கட்சியைக் கட்டி எழுப்புவதன் மூலம் தொழிலாள வர்க்கத்தின் ஒரு சுயாதீனமான அரசியல் அமைப்பை நிறுவுதல், ஒரு தொழிலாளர் அரசாங்கத்தை நிறுவுதல் என்பனவாகும். இப் பிரச்சாரம் ஒருபுதிய புரட்சிகரத் தலைமையைக் கட்டி எழுப்பும் போராட்டத்தை முன்னெடுத்தது.

## சோசலிச வேட்பாளருக்கு 10000 வாக்குகள்

1992 நவம்பர் 03ம் திகதி நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ட்ரொட்ஸ்கிச கட்சியான 'வேர்க்கஸ் லீக்' சுமார் 10,000 வாக்குகளைப் பெற்றுள்ளது. வேர்க்கஸ் லீக் ஜனாதிபதி வேட்பாளர் ஹெலன் ஹெல்யாட்டும், உப-ஜனாதிபதி வேட்பாளர் பிரெட் மார்செல்சும் மிச்சிக்கன் மாநிலத்தில் 1462 வாக்குகளையும் நியூ ஜேர்சி மாநிலத்தில் 1454 வாக்குக்களையும் பெற்றனர், இவ்விரு மாநிலங்களிலேயே இவர்களின் பெயர்கள் வாக்குச் சீட்டுக்களில் இடம்பெற்றிருந்தன.

மிச்சிக்கன், பென்சில்வேனியா மாநிலங்களில் அமெரிக்க காங்கிரசுக்குப் போட்டியிட்ட ஐந்து வேர்க்கஸ் லீக் வேட்பாளர்கள் 6969 வாக்குகள் பெற்றனர். 14வது காங்கிரஸ் மாவட்டமான பென்சில்வேனியாவில் போட்டியிட்ட வேர்க்கஸ் லீக் வேட்பாளர் போல் ஸ்செரர் 739 வாக்குகள் பெற்றார். மிச்சிக்கன் காங்கிரஸ் மாவட்டத்தில் வேர்க்கஸ் லீக்குக்கு கிடைத்த மொத்த வாக்குக்கள் 6230—1982 தேர்தலில் கட்சிக்குக் கிடைத்த வாக்குகளை விட இருமடங்காகும். மிச்சிக்கனில் வேர்க்கஸ் லீக் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு வாக்களித்தவர்களில் பெரும்பான்மையினர் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருக்கு வாக்களிக்கவில்லை.

புஷ் நிர்வாகத்தை தூக்கி வீசும் பொருட்டு கிளிங்டனுக்கு அல்லது பெரொட்டுக்கு தெளிவாக வாக்களித்த பல தொழிலாளர்கள், காங்கிரஸ் சபை தேர்தலுக்கு வாக்களிக்கையில் ஒரு சோசலிச வேலைத்திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வாக்களித்துள்ளனர்.

வாசியுங்கள்!

சோவியத் யூனியன் எங்கே செல்கின்றது?

தொடர்புகளுக்கு:- விலை: 25—00 ரூபா

ஆனந்த வக்கும்புற
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு-10

படிப்பகம்

www.padippakam.com

## அமெரிக்க ஜனதிபதி தேர்தல்

# டிராட்ஸ்கிச வேட்பாளர் உலகப் பிரச்சார சுற்றுப்பயணம்!



ஹெலன் ஹெலார்டு

அமெரிக்க டிராட்ஸ்கிச கட்சியான தொழிலாளர் கழகத்தின் சார்பில் ஜனதிபதி பதவிக்கு போட்டியிடும் வேட்பாளரான ஹெலன் ஹெலார்ட் செப்டம்பர் மாத இறுதியில் உலக பிரச்சாரப் பயணத்தை துவக்கினர்.

தனது இந்த நான்கு வார கால பயணத்தில் ஹெலன் இங்கிலாந்து, ஜெர்மனி, இலங்கை, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் உள்ள மக்கள் மத்தியில் பேசவிருக்கிருர். பயணத்தின் நோக்கத்தைப் பற்றி ,ஹெலார்ட் விளக்கும் போது, நடக்கவிருக்கும் கூட்டங்கள் தொழிலாள வர்க்க சர்வதேசிய ஐக்கியத்திற்காக போராட ஏதுவாகும் என்ருர். எனது 'ஜனதிபதி தேர்தல் பிரச்சாரத்தில் சர்வதேசியம் தான் மையமாக அமைந்தது என்று வலியுறுத்தி கூறினர்..

ஐக்கிய அமெரிக்க அரசின் மோசடையும் பொருளாதார சமூக நெருக்கடி பற்றி மற்ற நாடுகளில் உள்ள தொழிலாளர்களுடன் கலந்துரையாட ஏற்படும் சந்தர்ப்பத்தை நான் வரவேற்கின்றேன், எனது பிரச்சாரத்தில் நான் முன் வைக்கும் சர்வ தேசியமானது மற்ற நாடுகளில் உள்ள தொழிலாளர்கள் தொடுக்கும் போராட்டங்களுக்கு வெறும் மேலாட்டமாக காட்டும் ஐக்கியம்அல்ல. ஆனல் தொழிலாளர் இயக்கத்தை மீண்டும் கட்டுவதற்கான மூலோபாயத்தின் அடிப்படையிலாகும் என்று வலியுறுத்தினர்.

எந்த ஒரு நாட்டில் என்ருலும் தனியாக தேசிய ரீதியான போராட்டங்களின் அடிப்படையில் தொழிலாள வர்க்கம் முன்னேற முடியாது என்றும், சர்வ தேசிய ரீதியாக, இயக்க பூர்வமாக அமைக்கப்பட்ட முதலாளித்துவத்தை. சர்வ தேசிய ரீதியாக ஐக்கியப்பட்ட தொழிலாள வர்க்கத்திலுல் மட்டுமே தோற்கடிக்க முடியும் என்று கூறினர்.

முதலில் தோழர் ஹெலார்ட் இங்கிலாந்துக்கு பயணம் செய்கிருர். அங்கு அவர் லண்டனில் அக்டோபர் 4ம் தேதியன்று பொதுகூட்டத்தில் உரையாற்றுகிருர். அங்கிருந்து ஜெர்மனி சென்று எசன் நகரிலும், பெர்லின் நகரிலும் பேச இருக்கிருர். அடுத்து அவர் இலங்கை செல்கிருர். அங்கு அவர் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் இலங்கை பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்திஞல் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் தலைநகர் கொழும்பு மற்ற, பல நகரங்களிலும், கிராமங்களிலும் உரையாற்றுகிருர்,

பயணத்தின் இறுதியாக ஆஸ்திரேலியா சென்று நா.அ.அ.கு.வின் ஆஸ்திரேலிய பகுதியான சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் பொதுக் கூட்டங்களில் முக்கிய நகரங்களான மெல்போர்ன், சிட்னி, பிரிஸ்பானில் ''அமெரிக்காவில் பொருளாதார சமூக நெருக்கடியும். தொழிலாள வர்க்கத்தின் பணிகளும்'' என்ற தலைப்பின் கீழ் பேச இருக்கிருர்.


# தொழிலாளர் பாதை

விலை 2/

நான்கரம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் மாத வெளியீடு

இதழ் எண் 52 ★ அக்டோபர், 1992 ★




### டிராட்ஸ்கியின் நூல்

### வெளியீட்டுத் திட்டம் ரூ. 25,000

**இலக்கை அடைய ஆதரவு தாரீர்!**

அக்டோபர் புரட்சியில் லெனினுடன் இணைத் தலைவரும், செம்படையைக் கட்டி எழுப்பியவரும், நான்காம் அகிலத்தை நிறுவியவருமான லியான் டிராட்ஸ்கியின் எழுத்துக்கள் முன்னுள் சோவியத் யூனியன், சீன, கிழக்கு ஐரோப்பிய ஸ்டாலினிச ஆட்சியாளர்களால் தடை செய்யப்பட்டு, அந் நாடுகளில் உள்ள தொழிலாள வர்க்கத்துக்கு கிடைக்காமல் செய்யப்பட்டன, இவ்வாறு தொழிலாளர்கள் அரசியல் ரீதியாக நிராயுதபாணியாக்கப்பட்டதால், முதலாளித்துவ மீட்சி முன்னுள் சோவியத் யூனியனிலும். கிழக்கு ஐரோப்பாவிலும் சாத்தியமாகியது. மார்க்சிசக் கலாச்சாரத்தை அடியோடு அழித்த ஸ்டாலினிசத்திற்கு எதிராக மீண்டும் மார்க்சிச பாரம்பரியத்தைப் புதுப்பிக்க டிராட்ஸ்கியின் நூல்கள் வலிமையான ஆயுதங்களாகும். எனவே அதனை தமிழ், வங்காள மொழிகளில் கொண்டு வர இருக்கிறேம். எனவே வாசகர்களும், ஆதரவாளர்களும் தாராளமாய் நிதி உதவியினை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேம்,

# முதலாளித்துவத்தின் தோல்வியும் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர கடமையும்

ஜப்பானின் தலைநகரமான டோக்கியோவில் வங்கியாளர் கூட்டுறவு சம்மேளனத்தின் கூட்டமொன்றில் உரையாற்றியஅமெரிக்க பெடரல் ரிசர்வ் போர்ட் தலைவரான அலன் கிரீன்ஸ்பான் இந்த நூற்ருண்டில் ஏற்பட்ட முன்னையபொருளாதார பின்னடைவுகளை காட்டிலும் மிகவும் நீடித்த தன்மை கொண்டதாக நிரூபிக்கக் கூடிய பொருளாதார வீழ்ச்சியை அமெரிக்காவும் ஜப்பானும் எதிர் கொண்டுள்ளன என்று கூறினர், இவ்வாறான பொருளாதார பின்னடைவு சொத்து விலைகளில் ஒரு கூர்மையான வீழ்ச்சியுடன் சேர்ந்ததாக இருக்குமாயின் அதிலிருந்து மீள மிக நீண்ட காலம் ஆகும். இப்படியான தன்மையுடைய பொருளாதார பின்னடைவு இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் இதுவரை இருந்ததில்லை என்றும் கிரீன்ஸ்பான் கூறினர்.



பிரிட்டிஷ் பவுண்டின் வீழ்ச்சியின் பொழுது லண்டனில் நாணய விற்பனையாளர்கள்

ரியல் எஸ்டேட் மற்றும் சொத்து விலைகளில் ஏற்பட்டுள்ள கூர்மையான வீழ்ச்சிக்கு ஏற்றவாறு பொருளாதாரத்தை சரிசெய்துகொள்ள தொடங்கும்போது வளர்ச்சியில் உயர்ச்சியை எதிர்பார்ப்பது பற்றி கிரீன்ஸ்பான் எச்சரித்தார். அமெரிக்கா. பிரிட்டன், ஆஸ்திரேலியா மற்றும் ஸ்கண்டிநேவியன் நாடுகள் (நார்வே. சுவீடன், டென்மார்க்) சொத்து விலை வீழ்ச்சியை எதிர் கொண்டுள்ளன. இது பற்றி முன்கூட்டியே சொல்லவோ அல்லது சரி செய்யவோ கொள்கை உருவாக்குபவர்களுக்கு (அரசாங்கங்களுக்கு) போதுமான அனுபவம் கிடையாது என்றும் அவர் கூறினர். சொத்து மதிப்புகளின் வழக்கத்திற்கு மாறான வீழ்ச்சி, பொருளாதாரங்களை சரிசெய்ய கையாளப்பட்ட பாரம்பரிய வழிமுறைகளை மதிப்பிழக்கச் செய்துள்ளது.

ஜப்பானிய நிறுவனங்கள் முன் கண்டிராதளவு வேகத்தில் திவாலடைந்து செல்கின்றன, மீட்க முடியாத கடன்களுக்கு எந்தளவுக்கு ஜப்பானிய வங்கிகள் ஆளாகியிருக்கின்றன என்பது பற்றி அறிய நிதி வட்டாரங்கள் அக்கறை காட்டுகின்றன. பெரும்பாலான ஐரோப்பிய பொருளாதாரங்களை போலவே ஜப்பானிய பொருளாதாரமும் பின்னடைவின் விளிம்பில் உள்ளது. நுகர்வில் மந்தநிலை ஏற்பட்டுள்ளது சொத்து விலைகளில் தொடர்ச்சியான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இது பெரும்பாலான ஜப்பானிய நிறுவனங்களின் நிலுவைக் கணக்குகளை பாதித்துள்ளது. அதிகரித்து வரும் செயலற்ற கடன்களுடன் போராடிவரும் ஜப்பானிய வங்கிகளுக்கு,அமெரிக்காவில் சிறிய வங்கிகள் மற்றும் சேமிப்பு ஸ்தாபனங்களின் வீழ்ச்சியை சமாளிக்க அரசாங்கத்தின் அமைப்பு ஆதரவு இருப்பதைப் போன்று தேவைப்படுமோ என்பது பற்றி இப்பொழுதே கூற முடியாது உள்ளது என்று கிரீன்ஸ்பான் கூறினர்.

ஐரோப்பாவிலும் நிலைமை அதே போன்று தாழ்வுடையதாக உள்ளது, நிலுவைக் கணக்கு மதிப்புகளுக்கு ஏற்றவாறு ரியல் எஸ்டேட் விலைகள் இல்லை, ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்துள்ளன, பெரும் தொழிற்துறை நிறுவனங்களிஞல் மூலதன முதலீடுகள் வெட்டப்பட்டுள்ளன. விற்பனையாகாத பொருள்களின் விரிவான பட்டியல்— அவை வாகனங்களாக இருந்தாலும் சரி அல்லது நுகர்வுப் பொருள்களாக இருந்தாலும் சரி-அதிகரித்துச் செல்கின்றன, கடுமையான பணச்சுற்று பிரச்சினையை தோற்றுவிக்கின்றன.

பிரிட்டனைப் போலவே ஜெர்மனியின் தொழிற்துறை உற்பத்தி மார்ச் மாதத்திலிருந்து வீழ்ச்சியடைய தொடங்கியது. இதர ஐரோப்பிய நாடுகளைப் போலவே பிரான்சும் பொருளாதார பின்னடைவில் உள்ளது. இப்போது ஐரோப்பாவை துடைத்துக் கட்டும் பொருளாதார, நிதி நோய் ஜெர்மனியை மறு ஐக்கியம் செய்வதற்கு தேவையான உண்மையான செலவை குறைத்து மதிப்பிட்டதன் விளைவாகும் என்று பார்வையாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

(இந்து, 19-10-92, பக்கம் 5)

மூன்று வருடங்களுக்கு முன்னர் பெர்லின் சுவர் வீழ்ச்சியடைந்ததிலிருந்து சோவியத் யூனியன் உடைந்து போனது வரையிலான சம்பவங்களை முதலாளித்துவ வர்க்கமும் அதன் பரிந்துரையாளர்களும் ''சோசலிசத்துக்கு தோல்வி'' என்றும் ''மார்க்சிசத்தின் மரணம்'' என்றும் மார்தட்டி வந்தார்கள்.

(20 ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com

# மேற்கு வங்க ஸ்டாலினிச அரசாங்கத்தின் போலீஸ் கற்பழிப்புக்களும் ஜோதிபாசுவின் வக்காலத்தும்!

—அகிலன்

**ஸ்டாலினிச சி.பி.ஐ. (எம்) ஜோதிபாசுவின் முதலாளித்துவ அரசு எந்திரத்தின் போலீசார், செப்டம்பர் 23ம் தேதியன்று கிழக்கு கல்கத்தாவிலுள்ள புல்பகான் போலீஸ் நிலையத்தில் இரண்டு குழந்தைகளுக்குத் தாயான 30 வயது பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்திருக்கிறார்கள்.**

### பத்மினிகளும் நெஹார் பானுக்களும்

அண்ணாமலை நகர் போலீஸ் நிலயத்தில் தன் கணவர் எதிரிலேயே பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட பத்மினிக்கு நீதி கேட்டு குரல் கொடுப்பதாக பாசாங்கு செய்துவரும் சி.பி.ஐ.(எம்) கட்சியும், அதன் மாதர் சங்கமும், இளைஞர் அமைப்பும் (DYFI) சரி அனைத்துமே முதலாளித்துவ அரசு எந்திரங்களுள் ஒன்றான போலீசைப் பாதுகாத்து கொண்டு, சீர்திருத்தங்களைச் செய்வதன் மூலம் பிரச்சனைகளைத் தீர்க்கலாம் என்று பிரமைகளை உழைக்கும் மற்றும் ஒடுக்கப்படும் மக்கள் மத்தியில் திணித்து வருவதை நாம் ஏற்கனவே பலமுறை அம்பலப் படுத்தி இருக்கிறோம்.

ஆனால் கல்கத்தாவில் நெஹார்பானு போலீசாரால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதற்கு குரல் கொடுக்க சி.பி.ஐ.(எம்) மாதர் சங்கம், இளைஞர் சங்கம் உட்பட ஒருவர் கூட மூச்சை விடவில்லை. அதோடு மட்டுமல்ல இது சம்பந்தமாக பத்திரிகையாளர் ஒருவர். "இம்மாதிரி (நெஹார் பானு போன்ற நடைபாதை வாசி) பெண்களுக்கு அரசு பாதுகாப்பு வழங்கியிருக்கிறதா" எனக் கேட்டதற்கு சி.பி.ஐ.(எம்) தலைவரும் மேற்கு வங்க முதலமைச்சருமான ஜோதிபாசு "(நகரின்) நடைபாதைகளில் வசிக்கும் அனைவருக்கும் போலீஸ் பாதுகாப்பை உத்தரவாதம் செய்ய முடியாது" - ஸ்டேட்ஸ்மென் 24 செப்டம்பர்' — என்று வெளிப்படையாக அறிவித்ததன் மூலம் உழைக்கும் மக்களுக்கு மற்றும் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான ஒடுக்கு முறைகளை உத்தரவாதம் செய்திருக்கிறார்.

### புல்பகான்போலீஸ் நிலயத்தில் கற்பழிப்பு

24 பர்கானாவின் வடக்குப் பகுதியைச் சேர்ந்த கிராமத்தை பிறப்பிடமாக்க் கொண்ட நெஹார்பானு கை ரிக்ஷா இழுக்கும் கணவனால் கைவிடப்பட்ட நிலையில், வீட்டு வேலைச் செய்து தனது 7வயது மகனையும் 10வயது மகளையும் காப்பாற்றி வருகிறார்.



போலீஸ் கிரிமினல்களால் பாலியல் பலாத்காரம்' செய்யப்பட்ட நெஹார்பானு

செப் 23ம் தேதி நள்ளிரவு இரண்டு மணிக்கு புல்பகான் போலீஸ் நிலைய கான்ஸ்டபிள் நீல்கமல் கோஷ், தூங்கிக் கொண்டிருந்த நெஹார் பானுவை எழுப்பி, வழக்கு சம்பந்தமாக அவள் தேவைப் படுவதாகவும், உடன் வருமாறு அழைத்தான். தனது சக நடைபாதை வாசிப் பெண்ணின் வழக்கு சம்பந்தமாக அங்கு அவள் பலமுறை சென்றிருக்கிறார். இருப்பினும் முடிந்து போன அந்த வழக்குக்காக கான்ஸ்டபிள் கூப்பிட்டதும் நெஹார்பானுவுக்கு சந்தேகம் வந்து வர மறுத்திருக்கிறார்

நீல்கமல் கோஷின் முயற்சி எடுபடாமல் போகவே, போலோநாத் எனும் கான்ஸ்டபிள் டிரைவரையும், சமதன்முரு எனும் கான்ஸ்டபிளையும் அனுப்பி நெஹார் பானுவை அழைத்துவருமாறு கூறியிருக்கிறான். போலீஸ் வாகனத்தைக் கண்டதும் நெஹார் பானு அலறியிருக்கிறார். அப்படியும் அவரை விடாமல் பலாத்காரமாக போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டு வரப் பட்டிருக்கிறார். அங்கு நீல்கமல் கோஷ் அவரை முதலில் பாலியல் பலாத்காரம் செய்து விட்டு பிறகு அங்கு குடி போதையுடன் இருந்த காளி படாமுடு. சாதன் பௌமிக், ரபிலோசன் மகதா ஆகிய மூன்று கான்ஸ்டபிள்களும் நாசம் செய்துவிட்டு அதிகாலை 2 மணிக்கு மீண்டும் போலீஸ் வாகனத்தில் எற்றி வந்து நடைபாதையிலேயேஅவளைத் தள்ளிவிட்டு போய் விட்டனர்

விஷயம் வெளியில் அம்பலமாகியதும். நெஹார் பானுவை சமூக சேவை நிறுவனத்தையும்,எதிர்கட்சிஆர்ப் பாட்டக்காரர்களையும் தடுத்தது ஸ்டாலினிஸ்ட் ஜோதி பாசுவின் போலீஸ். சந்திக்க விடவில்லை எனில் இரவு முழுவதும் போலீஸ் நிலயத்தை முற்றுகையிடப் போவதாக மிரட்டியதுமே ஒரு மணி நேரம் கழித்து சந்திக்க அனுமதித்தனர். ஏற்கனவே சத்துக் குறைவால் பாதிக்கப் பட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ள தனது மகனுடன் தனக்கு நேர்ந்த கதியையும் எண்ணிக் கலங்கிக் கொண்டிருக்கும் நெஹார் பானுவை போலீஸ் நிர்ப்பந்தப்படுத்தி, அந்த போலீஸ் கிரிமினல்களை நிரபராதி என விடுவிப்பதற்கு அறிக்கை வாங்க முயற்சி செய்வதாகவும் தெரிகிறது. தொடக்கத்தில் டெபுடி கமிஷ்னர் ஆப் போலீஸ் பதவி வகிக்கும் அதிகாரி மருத்துவ பரிசோதனை சம்பந்தமாக முரண்பட்ட தகவல்களை அளித்திருக்கிறார். இதுவும் போலீஸின் சதி முயற்சியை ஊர்ஜிதப்படுத்துகிறது.

### மேற்கு வங்க போலீஸ் கற்பழிப்புகள்

போலீஸ் துறையைத் தனது கையில் வைத்திருக்கும் ஸ்டாலினிஸ்ட் ஜோதிபாசு "இந்த ஒரு சம்பவத்தை மட்டும் வைத்துக் கொண்டு முடிவுக்கு வர முடியாது" என்று கூறியுள்ளார். அத்துடன் மட்டுமல்லாமல், இந்த கற்பழிப்பு சம்பந்தமாக எந்த விதகருத்தும் கூறாமல், உயர் போலீஸ் அதிகாரி "உரிய நடவடிக்கை" எடுத்ததற்காக பாராட்டைத் தெரிவித்துள்ளார். ஸ்டாலினிச சி.பி.ஐ யின் பாராளுமன்ற உறுப்பி



போலீஸ் அராஜகத்தை எதிர்த்து ஆர்பாட்டம் செய்த பெண்களை தடியடி நடத்தி இழுத்துச் செல்லும் காட்சி.

(20 ம் பக்கம் பார்கக)

## மதுரை கோட்ஸ் ஆலைத் தொழிலாளர் மீது போலீஸ் துப்பாக்கி சூடு!

# தொழிலாளர் பாதுகாப்பு குழுவை அமை!

—சுந்தரம்

**நெல்லை மாவட்டம் விக்கரமசிங்கபுரம் மதுரை கோட்ஸ் ஆலை தொழிலாளர்கள் காட்டுமிராண்டி தனமாக போலீசாரால் சுடப்பட்டதை சோசலிசத் தொழிலாளர் கழகம் மிகவும் வன்மையாக கண்டனம் செய்வதோடு, தொழிலாளர்கள் தங்களின் பாதுகாப்பிற்காக தொழிலாளர் பாதுகாப்பு அணிகளை அமைக்க வேண்டும் என்று அறை கூவல் விடுக்கின்றது.**

அக் 17ம் தேதி தங்களின் போனஸ் கோரிக்கைகளுக்காக போராடிக் கொண்டிருந்த தொழிலாளர் மீது ஜெயலலிதா அரசாங்கத்தின் போலீஸ் கண்மூடித்தனமாக சுட்டத்தில் ஒரு பெண் உட்பட 4 பேர் காயமடைந்தனர் மதுரை கோட்ஸ் நிறுவனம் தமிழகத்தில் மதுரை, திருச்சி, விக்கிரமசிங்கபுரம். தூத்துக்குடியிலும கேரளத்தில் கொரட்டியிலும் மற்றும் நாட்டின் பல பகுதிகளிலும் உள்ளது. இந்த வருடம் கம்பெனிக்கு கொழுத்த லாபம் வந்தும் தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய நியாயமான போனஸை கொடுக்க மறுத்தது,இதன்காரணமாகதொழிலாளர்கள் போராட்டத்தில் இறங்கினர். விக்கிரமசிங்கபுரத்தில் உள்ள தொழிலாளர்களின் ஊர்வலத்தில் முதலாளித்துவ அரசு எந்திரம் தடியடி பிரயோகமும், துப்பாக்கி சூடும் நடத்தியுள்ளது. இந்த சம்பவம் மதுரை கோட்ஸ் நிறுவனத்தின்- தொழிலாளர்களின் தனிப்பட்ட பிரச்சனை அல்ல. மரண நெருக்கடியில் உள்ள இந்த முதலாளித்துவ அமைப்பில் - சந்தைக்கான உற்பத்தியில்-மலிந்த கூலிக்காகவும், கச்சாப் பொருட்களுக்காகவும் வெறி பிடித்த நாய் போல் அலைகின்றனர். இந்த நிலையில் ஒன்றை ஒன்று விழுங்கும் நிலையில் பன்னாட்டு பகாசுரகம்பனிகள் தொழிலாளர்களை கோரமாக சுரண்டவும், தொழிற்சங்க உரிமைக்கு கேட்டு வைக்கவும் முற்படுகின்றன. இதஸ்ஒரு பகுதியாகவே துப்பாக்கிச் சூட்டிற்கு பின் தொழிற்சங்க அலுவலகத்தை திறப்பதற்கு போலீஸ் தடை செய்துள்ளது.

### ஸ்டாலினிச கட்சிகள்

இந்த முதலாளித்துவ அமைப்பிற்கு தொழிலாளர் மற்றும் ஒடுக்கப்படும் மக்களிடமிருந்து எந்த ஆபத்தும் வராமல், சந்தர்ப்பவாத அடிப்படையில் மாறி மாறி முதலாளித்துவ கட்சிகளை ஆதரித்துக் கொண்டு இருக்கும் ஸ்டாலினிச கட்சிகளும் அதன் தொழிற்சங்க பிரிவுகளான C,I.T.U,A.I.TU C, யும் தொழிலாள வர்க்க இயக்கத்தில் இருந்து கொண்டு, எந்த ஒரு போராட்டத்தையும் துரோக தனமாக காட்டிக் கொடுத்து தொழிலாள வர்க்கத்தை சோர்வடைய செய்து நிராயுதபாணியாக்கி வருகின்றார்கள். இந்த துப்பாக்கி சூட்டிற்காக 22ம் தேதியன்று தமிழகம் முழுவதுமுள்ள ஆலை வாயில்களில் ஆர்ப்பாட்டம் நடத்துவதாக கூறுவது தொழிலாளவர்க்கம் முதலாளித்துவ வர்க்கத்திற்கு எதிராக கிளர்ந்தெழும்போராட்டத்தில் தன் பிடியை விட்டு நழுவி போய் விடாமல் இருக்கவே ஆகும். (உ.ம்.) நரசிம்மராவின், ஜெயலலிதாவின் அரசுகள் கொண்டு வந்த புதிய பொருளாதார கொள்கையை எதிர்த்து நாடு பரந்த அளவில் ஏற்பட்ட கொந்தளிப்பை கட்டுப்படுத்த ஒரு நாள் பொதுவேலை நிறுத்தத்துடன் முடித்தது. முதலாளித்துவ அரசஎந்திரத்தின் ஒருபகுதியான போலீசை, "திருத்தி அமைக்க வேண்டும்" என்றும் "கடிவாளத்தை மீறிய குதிரையாக" போலீஸ் இருக்கின்றது என்று கூறும் இந்த கட்சித் தலைமைகள் இவர்கள் ஆளுகின்ற மே. வங்கத்தில்

(20 ம் பக்கம் பார்க்க)

**சி.பி.ஐ.(எம்),சி.பி.ஐ. ஸ்டாலினிச துரோகத் தலைமைகளையும், சீர்திருத்தவாதத் தலைமைகளையும் தொழிலாள வர்க்க இயக்கத்தில் இருந்து உடனடியாக வெளியேற்று !**

வெளியீடு : சோசலிசத்தொழிலாளர் கழகம் தபால் பெ. எண் 968, பெரம்பூர் பாரக்ஸ், சென்னை-12, அச்சிட்டோர் : பரணி அச்சகம், சென்னை-12
ஆசிரியர் : எஸ். சக்தி

www.padippakam.com






**நான்காவது அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ஜெர்மன் பிரிவான சோசலிசத் தொழிலாளர் கழகம் (BSA) டிசம்பர் 5/6 ம் திகதிகளில் இனவாதத்துக்கும், போரபாயத்துக்கும் எதிராக நடாத்திய மகாநாட்டு அறிக்கையை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளிநாட்டுக் கிளை பிரசுரித்துள்ளது. அனைத்து தொழிலாளர்களையும் இந்த அறிக்கையை படிக்குமாறும், BSA யின் கூட்டங்களில் பங்குகொள்ளுமாறும் அறை கூவல் விடுகின்றோம். கூட்ட விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.**

## மேற்கு வங்க ஸ்டாலினிச

(11 ம் பக்கத்தொடர்ச்சி)

கிதோமுகர்ஜி கூடுதல் D.G.P க்கு விடுத்த கடிதத்தில், மிட்னாப்பூரின் பிங்லா பகுதியைச் சேர்ந்த ஜாசோராஜ்பூர் கிராம ஆதிவாசிப் பெண்ணை, கிராமத் தலைவரின் மகனும் அவனது கூட்டாளியும் சேர்ந்து பாலியல் பலாத்காரம் செய்த பின்னரும் போலீஸ் நடவடிக்கை எடுக்காததையும் அதே போல் இன்னொரு ஆதிவாசிப் பெண் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு, அவளது குடிசை அழிக்கப்பட்டதையும் கட்டிக் காட்டியுள்ளார்.

### வலதுசாரி முதலாளித்துவ பங்காளராக சீரழியும் ஸ்டாலினிசம்

உழைக்கும் மக்களை ஒடுக்க போலீசை நவீனப்படுத்தி வரும் ஸ்டாலினிச ஜோதி பாசுவின் அறிக்கை ஆச்சரியப் படுவதற்கு இல்லை. சர்வ தேச ரீதியாக ஸ்டாலினிசம் எதிர்ப்புரட்சி முகாமுக்கு போய் விட்டது என்றார் டிராட்ஸ்கி. இன்று சர்வ தேச ரீதியாக ஸ்டாலினிஸ்டுகள் பண்பியல் ரீதியாக மாற்றம் அடைந்து ஏகாதிபத்தியத்தின் தரகு முதலாளித்துவ வர்க்கப் பிரதிநிதியாக மாறி விட்டனர்,

ஜோதிபாசு தனது மகனை முதலாளியாக்கி அரசு செலவில் லண்டன் சுற்றுப்பயணம் செய்து, நரசிம்மராவின் காங்கிரஸ் அரசாங்கத்தின் பிரதிநிதியாக N.R.I. முதலாளிகளுக்கு இந்தியாவில் முதலீடு செய்யும்படியும், குறிப்பாக மேற்கு வங்கத்தில் சுரண்ட வரும்படியும், அதற்கு ஒத்துழைப்பு தருவதாகவும் சுவராஜ்பாட்டிலுக்கு அழைப்பு விடுத்தார். காங்கிரசின் வேட்பாளர் சர்மாவுக்கு ஆதரவளித்து முதலாளித்துவ அரசாங்கத்தைப் பாதுகாத்து வரும் ஸ்டாலினிச சி.பி.ஐ, (எம்) கட்சி பஞ்சாப். அசாம், காஷ்மீரில் இராணுவ அரச பயங்கர வாதத்திற்கு முழு ஆதரவு தருவதோடு தான் ஆளும் மேற்கு வங்க மாநிலத்தில் போலீஸ் காட்டுமிராண்டித் தனத்தை உழைக்கும் மற்றும் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகத் திருப்பி வருகின்றது. அதன் ஒரு பகுதி தான் இந்த போலீசின் பாலியல் பலாத்காரங்கள்,

### முதலாளித்துவ போலீஸ் இராணுவத்தை கலை

முதலாளித்துவ அரசு எந்திரங்களை நொறுக்காமல் பத்மினிகளுக்கும், நெஹாார் பானுகளுக்கும் விமோசனம் கிடையாது. தொழிலாள வர்க்கத்தின் தலைமையிலான சோசலிசப் புரட்சியின் மூலம் அல்லாமல் முதலாளித்துவ அரசு எந்திரங்களை நொறுக்க முடியாது. தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரத் தலைமை நெருக்கடியைத் தீர்க்காமல் சோசலிசப் புரட்சி சாத்தியமில்லை. அத்தகைய தலைமை நெருக்கடியை தீர்ப்பது, தொழிலாள வர்க்கத்துக்குள் டிராட்ஸ்கிச தலைமையைக் கட்டுவதிலும், ஸ்டாலினிச துரோகத் தலைமைகளை தொழிலாள வர்க்க இயக்கத்திலிருந்து உடனடியாக வெளியேற்றுவதிலுமே தங்கியிருக்கின்றது.

### மதுரை கோட்ஸ்...,

(11 ம் பக்கத்திலிருந்து)

நடக்கும் போலீஸ் அராஜகத்திற்கு என்ன கூறுவார்கள்.

முதலாளித்துவ சொத்துடமையைதனியுடைமையை காப்பாற்றும் ஆயுதம் தாங்கிய பிரிவாகிய போலீசை ஸ்டாலினிச தலைமைகள் போலீஸ் துறை என்றும் அதை சீரமைக்க வேண்டும் என்றும் கூறுவது அரசாங்கத்தின் மற்ற துறைகளை போல் இதுவும் ஒரு துறை என்ற

### சோசலிச வேலைத்திட்டத்திற்கு போராடு!

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகம் பின் வரும் வேலைத் திட்டத்தை முன் வைக்கிறது.

- முதலாளித்துவ போலீஸ்-இராணுவத்தை கலை!
- தொழிலாளர் பாதுகாப்பு படையணிகளைக் கட்டு!
- பாலியல் பலாத்காரத்தை விசாரணை செய்வதற்கு தொழிலாளர் - இல்லத்துப் பெண்கள் ஆகியோர் கொண்ட மக்கள் விசாரணைக் குழுவை அமை!
- முதலாளித்துவ அரசு எந்திரத்தைத் தூக்கிவீசி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவ காலவரையற்ற அகில இந்திய பொது வேலை நிறுத்தத்திற்கு தயாராகு!
- ஸ்டாலினிச சி.பி.ஐ.(எம்), சி.பி.ஐ. தலைமைகளை தொழிலாள வர்க்க இயக்கத்திலிருந்து உடனடியாக வெளியேற்று!
- சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியாக நான்காம் அகிலத்தைக் கட்டு!

பிரமையை தொழிலாளர்களிடையே ஊட்டுவதற்காகும், தொழிலாளர்களை ஒடுக்கும் முதலாளித்துவத்தின் அரசு இயந்திரத்தை சீர்திருத்த முடியும் என்று எதிர்புரட்சிகர ஸ்டாலினிச தலைமைகள் பரப்பும் பிரமையை நிராகரிக்க வேண்டும் தொழிலாளர்களின் சொந்த பாதுகாப்பு அணிகளை கட்ட வேண்டும். முதலாளித்துவ அரசு இயந்திரத்தை தொழிலாள வர்க்க பலத்தினால் உடைத்தெறிந்து மாற்று புரட்சித் தலைமையை கட்டும் போராட்டத்துடன் இது பின்னிப்பிணைந்ததாகும்

## முதலாளித்துவத்தின் தோல்வியும்...

(18 பக்கத்தொடர்ச்சி)

இவ்வாறான காட்டுத் தனமான வெற்றிக் களிப்புடன் சுய திருப்தியடையும் ''தத்துவங்களும்'' சேர்ந்து வந்தன. அவை முதலாளித்துவத்துக்கு இறுதி வெற்றி கிடைத்து விட்டது என்று முழங்கின. இவை அனைத்துமே இன்றைய உலக சம்பவங்களினால் துடைத்தெறியப்பட்டுள்ளன,

ஒவ்வொரு பெரும் ஏகாதிபத்திய சக்தியும் பொருளாதார மந்தத்திலும் பின்னடைவிலும் மூழ்கிப் போயுள்ளன நாணய சந்தைகளில் ஏற்பட்ட (செப்டம்பர் 16, ''கறுப்பு புதன்கிழமைகளில்'' தொடங்கிய) பெரும் சுழற்சிகள் உலக நிதி அமைப்பையே வீழ்த்தும் அச்சுறுத்தலை கொண்டுள்ளன. வர்த்தக பேச்சு வார்த்தைகளுக்கு கதவுகள் அடைக்கப்பட்டுள்ளன. ஒரு மோசமான வர்த்தக யுத்தத்துக்குள் உலகம் மூழ்குவதைதவிர்பதற்கான ''கடைசி சந்தர்ப்பமாக'' வரியிலும் வர்த்தகத்திலும் பொது உடன்பாடு (GATT) அமைப்பின் திரும்பத் தொடங்கும் பேச்சு வார்த்தைகள் கருதப்பட்டது யூகோசிலாவியாவில் யுத்தம் இடைவிடாது நடக்கிறது, அந்த யுத்தத்தில் ஏகாதிபத்தியங்களும் இழுக்கப்படும் அபாயம் நிலவுகிறது.

உலக முதலாளித்துவத்தின் இன்றைய நெருக்கடி நேற்றுத் தான் அவர்களுக்கு வரலாற்று வெற்றியாக தோன்றிய கிழக்கு ஐரோப்பாவின், முன்னைய சோவியத் யூனியனின் ஸ்டாலினிச அதிகாரத்துவங்களின் வீழ்ச்சியுடன் பிணைந்துள்ளது கூர்மையான மிகவும் முதலாளித்துவபார்வையாளர்கள் உணரத் தொடங்கியுள்ளனர், இது பற்றி முன்னணி முதலாளித்துவ பத்திரிகைகள் குறிப்பிடத் தொடங்கியுள்ளன. அண்மையில் லண்டனில் வெளியாகும் 'இன்ரிபென்ரன்ட், தினசரிப் பத்திரிகையில் வெளியான கட்டுரையொன்றிலிருந்து அமெரிக்காவில் வெளியாகும் வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகையும் பின்வருவதை மேற்கோள் காட்டியுள்ளது: ''ஒரு உலக பொருளாதார நெருக்கடி ஒரு மாதிரியான உலகப் புரட்சியாகும். அது பழைய பொருளாதார, அரசியல் அமைப்புகளை அழிக்கிறது. இந்த சூறுவளியின் முழு வீச்சின் முன்னால் முதல் வீழ்ச்சி கண்டது சோவியத் யூனியனும், அது இசைந்து போவது தொடர்பாக அடமான இயலாமை தன்மை கொண்டதாக இருந்தது ...அவ்வாறான நெருக்கடி, நிறைந்த அர்த்தமுள்ள அரசியல்வாதிகளை அழிக்கிறது. சக்தி கொண்ட மனிதர்களை உயர்த்துகிறது. அவ்வாறான சம்பவங்களை தமது தலைவர்களினால் கட்டுப்படுத்த முடியாதுள்ளது என்பதை மக்கள் கண்டறியும் போது அது அரசாங்கத்தின் மரியாதையை அழிக்கிறது.''

### நான்காம் அகிலத்தின் ஆய்வு

ஸ்டாலினிச அதிகாரத்துவங்களுக்கு அடிக்கப்பட்ட சாவுமணி உலக ஏகாதிபத்தியத்துக்கு எச்சரிக்கை மணியாகும் என்று நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு நான்கு வருடங்களுக்கு முன்பே ஆய்வு செய்தது. உண்மையில், இன்று உலக முதலாளித்துவத்தின் பேச்சாளர்கள் மத்தியில் நிலவும் தோல்வி மனப்பான்மையும் சோர்வும் மார்க்சிச முறையை ஊர்ஜிதம் செய்வதாக உள்ளது.

ஆகஸ்டு 1988ல் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் (ICFI) முன்னோக்கு தீர்மானங்கள் ''உலக முதலாளித்துவ நெருக்கடியும் நான்காம் அகிலத்தின் பணிகளும்'' என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்டது. அதில் சமுதாயத்தின் பொருளாதார அத்திவாரத்தில் ஏற்பட்டுவரும் அடிப்படையான மாற்றங்களின் தாக்கத்தின் கீழ் இரண்டாம் உலக யுத்தத்திற்கு பிற்பாடு ஏகாதிபத்தியத்தினால் உருவாக்கப்பட்ட உலக ஒழுங்கு முழுமையாக உடைந்து போய்விட்டது என்றும், அதன் ஒரு பகுதியே ஸ்டாலினிசத்தின் நெருக்கடியாகும் என்றும் நான்காம் அகிலத் அனைத்துலக குழு நிலை நாட்டியது.

முன்னோக்குத் தீர்மானம் கூறியதாவது: ''முன்கண்டிராத மூலதனத்தின் சர்வதேச இயக்கம் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர் இயக்கத்தின் அனைத்து தேசியவாத வேலைத் திட்டங்களையும் காலாவதியானதும், பிற்போக்கானதுமாக மாற்றியுள்ளது''. இந்த ஆவணம், இப்படியான வளர்ச்சிகள் கிரெம்ளின் அதிகாரத்துவத்தினால் செயல்படுத்தப்படும் தேசியவாத பொருளாதார கொள்கையை சாத்தியமற்ற தாக்கியுள்ளது. என்பதை தெளிவாக்கியது:

அது மேலும் கூறியதாவது: ''முதலாளித்துவ உற்பத்தியின் உலகத் தன்மையானது மேலும் பிரதான ஏகாதிபத்திய சக்திகளுக்கு இடையிலான பொருளாதார மற்றும் அரசியல் பகைமைகளை பிரமாண்டமான ரீதியில் கூர்மைப்படுத்தியுள்ளது. இது மீண்டும் ஒருமுறை புறநிலை ரீதியாக உலகப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கும் வரலாற்று ரீதியாக முதலாளித்துவ உடைமை வேலுன்றி இருக்கும் தேசிய அரசு வடிவத்துக்கும் இடையிலான சமரசம் காண முடியாத முரண்பாட்டை முன்னணிக்கு கொண்டு வந்துள்ளது'' (பக்கம் 8, குறிப்பு 14) உலக முதலாளித்துவம் எதிர்கொள்ளும் நெருக்கடி தவிர்க்க முடியாதபடி புரட்சிகர எழுச்சிகள் நிறைந்த ஒரு புதிய கால கட்டத்துக்கு வழி வகுக்கும் என்றும் ஆவணம் வலியுறுத்தியது.

ஒவ்வொரு நாட்டிலும் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் கோரமாக தொழிலாள வர்க்கத்தின் மேல் தாக்குதலை நடத்தி வருகிறார்கள். வெறித்தனமான தேசிய வாதத்தையும் சர்வாதிகார வழிமுறைகள் பற்றியும் பிரச்சாரப்படுத்தி வருகின்றனர்

தொழிலாள வர்க்கம் இன்றைய உலக முதலாளித்து. நெருக்கடிக்கு பதிலளிக்க வேண்டும், அதற்கு ஒரு புதிய சர்வதேசிய வேலைத்திட்டத்தின் அடிப்படையில் சோசலிசத்துக்கான போராட்டத்தில் உலகத் தொழிலாளர்களின் ஐக்கியத்துக்காக பாடுபட வேண்டும்.

தொழிலாள வர்க்கம் பழைய ஊழல் நிறைந்த, திவாலான, பிற்போக்கு ஸ்டாலினிச சி.பி.ஐ., சிபிஎம், மாவோயிச தலைமையிலிருந்து விடுபட்டு. புரட்சித் தலைமையாக டிராட்ஸ்கிச தலைமையைக் கட்டவேண்டும்.

*Printed in West Germany*
*Published by Neue Arbeiterpresse,*
*Alfredstr. 71, D - 4300 Essen 1*

படிப்பகம்